Not for sale

மார்ச் - ஏப்ரல் 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## அர்த்தமுள்ள விவரங்கள்

அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன்

சட்டத்திற்கு கட்டுப்படாத மனுஷன்


அனைத்து கிறிஸ்தவர்களும் மரணத்திற்குள் நித்திரை அடையவேண்டுமா?

மெல்கிசேதேக்கு • புதருக்குள் சிக்கிய ஓர் ஆட்டுக்கடா

உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்

அர்த்தமுள்ள விவரங்கள்

# ஆதியிலே



"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (11தீமோத்தேயு 3:16,17) நம்மை தெளிவாகப் புரிந்துகொண்டு, மிகச் சிறப்பாக வழிநடத்தும் பரம பிதாவினிடமிருந்து நேரடியாக இந்த வசனங்களை நாம் பெறுகிறோம். இவைகளை கவனித்துப் படிப்பதற்கு இதன் ஆழமான விவரங்கள் பத்திரமாக இருக்கிறது. எல்லா விவரங்களும் அர்த்தமுள்ளவைகளாக இராதபோதிலும் அதில் அநேக விவரங்கள் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். இந்த ஹெரால்டு பிரதியில் சில விவரங்களையும், அதன் அர்த்தங்களையும் தெளிவாக ஆராய்ந்துள்ளோம்.

நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலை, அதாவது கிறிஸ்துவின் சரீரமாக அநேகர் மகிமையடைந்த நிலையைப் பெறுவதற்கும், குறித்த காலத்தில் நாம் பெறப்போகிற பரலோக மகிமையின், உயர்ந்த நம்பிக்கைகளைக் குறித்ததான ஒரு பரவலான கண்ணோட்டத்தை, முதல் கட்டுரை எடுத்துரைக்கிறது. நமக்கே சொந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களின் மேல் நாம் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்பி **"அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்"** என்று நம்முடைய எஜமான் அதிகமான ஈடுபாட்டுடன் குறிப்பிடுகிறார்.

பாவ மனுஷன் என்ற பிரபலமான வார்த்தைக்குப் பதிலாக - கிரேக்க கைப்பிரதிகளில் பயன்படுத்தப்பட்ட **"சட்டத்திற்குக் கட்டுப்படாத மனுஷன்"** என்ற தலைப்பில் உள்ள வார்த்தைகள் இன்னும் சரியாகப் பொருந்துவதைக் காட்டுகிறது. இந்த வார்த்தைகளின் அர்த்தங்களும், அவைகளுக்குள் மறைந்திருக்கும் தீர்க்கதரிசனங்களின் விளக்கங்களும், பவுலின் வார்த்தைகளை மேலும் தெளிவு படுத்துவதை இந்த கட்டுரை விவரிக்கிறது.

**"அனைத்து கிறிஸ்தவர்களும் மரணத்திற்குள் நித்திரை அடையவேண்டுமா?"** ஆம், மகிமையில் எழும்பவேண்டுமானால், இங்கு நாம் அனைவரும் மரிக்கவேண்டும். இந்த சத்தியத்தை சிறப்பான கிரேக்க கைப்பிரதிகள் தெளிவாக வெளிப்படுத்துகிறதைப்பற்றி இந்த தலைப்பு எடுத்துரைக்கிறது. மேலும், அறுவடையின்போது மரிக்கக்கூடிய பரிசுத்தவான்களின் அனுபவத்திற்கும், அறுவடைக்கு முன்னதாக மரித்த பரிசுத்தவான்களின் அனுபவத்திற்கும் உள்ள வித்தியாசத்தை இந்த தலைப்பு பிரித்து காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டின் பிரபலமான சிறிய சம்பவங்களையும், அவைகளுக்குள் மறைந்திருக்கும் கிறிஸ்துவின் பணியையும் **"மெல்கிசேதேக்கு"** மற்றும் **"புதருக்குள் சிக்கிய ஆட்டுக்கடா"** என்ற தலைப்புகள் விவரிக்கின்றன. லூக்கா சுவிசேஷத்தில் எழுதப்பட்ட கடைசி இராப்போஜனத்தில் குறிப்பிடப்படும் இரண்டு பாத்திரங்களைப் பற்றியும் அதன் அடையாளங்களைப் பற்றியும் **"உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்"** என்ற இறுதி தலைப்பில் உள்ள கட்டுரை ஆராய்கிறது.

இந்த "அர்த்தமுள்ள விவரங்கள்" தேவனுடைய வார்த்தைகளில் உள்ள ஆழமான காரியங்களையும், அதில் உள்ள மதிப்பையும், நம்முடைய வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்வதற்கு இந்த பிரதி பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**மார்ச்-ஏப்ரல்**


**ஆதியிலே (அர்த்தமுள்ள விவரங்கள்) . . . . . .** 1

**அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன் . . . . .** 2

ஒரு யூத மணவாளன் தன்னுடைய மணவாட்டிக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துவதைப்போல நம்முடைய ஆண்டவர் நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துகிறார்.

**சட்டத்திற்குக் கட்டுப்படாத மனுஷன் . . . . . . .** 6

"சட்டத்திற்குக் கட்டுப்படாத மனுஷன்" சொல்லர்த்தமான மனுஷனைக் குறிப்பதல்ல, அது பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தும் மிகப்பெரிய மத அமைப்பாகும்.

**அனைத்து கிறிஸ்தவர்களும் மரணத்திற்குள் நித்திரை அடையவேண்டுமா? . . . . . . . .** 9

மூலப்பிரதிகளில் உள்ள 1கொரிந்தியர் 15:51,52 வசனங்கள், ராப்ச்சர் (rapture) என்ற அனுமானத்திற்கு எந்தவிதமான ஆதரவையும் காட்டுவதில்லை.

**மெல்கிசேதேக்கு** 12

பழங்காலத்து இராஜாவும், ஆசாரியனுமாக இருந்தவர், அப்பத்தையும் திராட்சரசத்தையும் ஆபிரகாமுக்குக் கொடுத்தார். ஆபிரகாமின் நிழலான சந்ததிக்கு இயேசுவும் இவைகளைக் கொடுத்தார்..

**புதருக்குள் சிக்கிய ஓர் ஆட்டுக்கடா. . . . .** 16

சிலுவை மரத்தில் இயேசுவின் பலியை, ஈசாக்குக்குப் பதிலாக பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்கடா முன்னதாக அடையாளப்படுத்தியது.

**உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்** 19

கடைசி இராப்போஜனத்தின்போது, பன்னிரெண்டு சீஷர்கள் மத்தியில் இரண்டு பாத்திரங்களை ஆண்டவர் கொடுத்தார் என்பதை லூக்கா மட்டுமே குறிப்பிடுகிறார்.



ஆசீர்வதிக்கப்பட்டதோர் வாக்குறுதி

# அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன் .....

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் Ted Marten
சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். - யோவான் 14:2

L.P.Davis, Jr.

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்." (யோவான் 17:4) என்று இயேசு கூறுகிறார். பரலோகப்பிதா இயேசுவுக்கு நியமித்த "கிரியைகள்" என்ன என்பதை ஒருவர் கேட்கலாம். தந்தையாம் ஆதாமுக்கு ஈடுபலியாக மரிப்பதே இயேசுவுக்கு நியமிக்கப்பட்ட வேலையா ? இது அடிப்படையான ஒரு வேலை, மேலும் அநேக வேலைகள் கொடுக்கப்பட்டது.

இயேசு அதிகமாக எதையும் கேட்கவில்லை."... நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் நான் வருமளவும் என் நினைவாகச் செய்யுங்கள் .." (1கொரிந்தியர் 11:24-26) என்று சொல்லி அப்பத்தையும் ரசத்தையும் சீஷர்களுக்குக் கொடுத்தார். அநேக வேதாகமங்களில் இந்த வார்த்தைகள் சிவப்பு மையினால் எழுதப்பட்டிரு க்கிறது. அவிசுவாசமான உலக ஜனங்களுக்காக அல்ல, மாறாக

* சாராளின் உடன்படிக்கைக்குக் கீழ் சபை எவ்வாறாக வளர்ச்சி அடைகிறது என்றும்,
* பாவ நிவர்த்தி செய்வதில் நம்முடைய ஆண்டவரோடு 1,44,000 மனிதர்கள் எவ்வாறாக கலந்துகொள்ளப்போகிறார்கள் என்றும்,
* சாத்தானும் அவனுடைய சீர்கெட்ட தூதர்களின் குறுக்கீடில்லாத ஒரு புதிய தலைமையிலும், ஒரு புதிய உடன்படிக்கையின் கீழும், முழு மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனைப்பெற ஒரு வாய்ப்பு கிடைக்கப்போகிறதைப்பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்டிருக்கிறது.

ஆகவே "அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன்" என்று இயேசு தாமே கூறினார்.

பூரண மனுஷனாகிய ஆதாமுக்கு ஈடாக தன்னுடைய ஜீவனை பலியாகக் கொடுக்கவேண்டும் என்பதை இயேசு நன்றாக அறிந்திருந்தார் என்று அவர் சொன்ன வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறது. ஆகவே, அவருடைய மரணம் நிச்சயிகப் பட்டிருந்தது. "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்." (யோவான் 17:4) என்று அவர் ஜெபித்தார். அதற்குபின் நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துவதாகக் கூறினார். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான் 14:3) இஸ்ரயேலர்களைப் பொருத்தவரைக்கும் இது ஒரு கல்யாண ஒப்பந்தமாக இருந்தது.

ஆம், அவருடைய தந்தையின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. நம்முடைய பிதாவாகிய தேவன் முன்னதாக திட்டமிட்டிருந்தாலும், நம்முடைய ஆண்டவரின் முதலாம் வருகையில் அந்த வாசஸ்தலங்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. சபையின் சகல அபூரணங்களையும் தன்னுடைய ஈடுபலியின் நன்மைகளால் மூடி, சபைக்காக ஒரு புதிய ஸ்தலத்தை ஆயத்தப்படுத்த நம்முடைய ஆண்டவர் உன்னதத்தில் ஏறினார். "....கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்." (எபிரெயர் 9:24)

தொடர்ந்து வருகிற அவருடைய மகிமையில் பங்கு பெறுவதற்கு இன்று நாம் இயேசுவின் பாடுகளில் பங்கெடுப்பதற்கு இந்த காரியமானது, நம்மை அனுமதிக்கிறது. ஆவிக்குரிய நிலைகளில் உள்ள உயர்ந்த நிலையை பெறுவதற்கான வழியை அவர் நமக்காக ஆயத்தம் பண்ணினார். "... மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவர் ஒருவருமில்லை" (யோவான் 3:13) மனுஷகுமாரன் மட்டுமே பரலோகத்திலிருந்து இறங்கி, கூடுதலான மகிமை, மற்றும் கனத்தையும் பெற்று அதே இடத்திற்கு மீண்டுமாகச் சென்றவர். அவர் பரலோகத்திற்கு ஏறி தன்னுடைய மணவாட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினார். நாம் அவருடைய மணவாட்டியாக ஆயத்தப்பட்டு அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கு பெறுவதற்கு, இன்று நமக்கு ஏற்படும் அனைத்து அனுபவங்களையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார். நம்முடைய இரட்சகர், நமக்காக ஆயத்தப்படுத்தின அந்த ஸ்தலத்தில் நாம் குடியேறுவோம் என்று நம்புகிறோம்.

## இக்காலத்து ஐக்கியம்

நம்முடைய பூமிக்குரிய இந்த வாழ்க்கையின் முடிவில் இயேசு ஆயத்தப்படுத்திய அந்த ஸ்தலத்தில் நித்தியமான ஒரு இடத்தைப் பெறுவோம் என்று நம்பினால், இந்த மாம்சத்தில் விலையேறப்பெற்ற விசுவாசத்தை, நம்முடைய சகோதரர்களின் ஐக்கியத்தில் நாம் பெற்று நிச்சயமாக மகிழலாம்.

"... இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்..." (எபிரெயர் 2:11) என்ற வசனத்தில் "சகோதரர்" என்ற வார்த்தை - நேசிக்கப்பட்டவர், உண்மையான நண்பன், சிநேகிதன் போன்ற அர்த்தங்களையும் கொடுக்கிறது. நாமும் இப்படிப்பட்ட ஐக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய பிதாவின் வீட்டில், இயேசுவின் வலது பக்கத்தில் ஆவிக்குரிய நிலையைப் பெறுவதற்கு, நம்முடைய அநேக இலக்குகளையும், விருப்பங்களையும் இழக்கிறோம். - "அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன்."

இந்த நம்பிக்கை உள்ளவர்களோடு ஐக்கியப்படுவதற்கு, இந்த வார்த்தைகள் மேல் நாம் கொண்டுள்ள விசுவாசம் நம்மை வழிநடத்துகிறது. நாம் தேவனுடைய புத்திரர் என்றும், அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்போம் என்றும், அவர் வாக்களித்ததின் மூலம் நம்முடைய பரலோகத் தந்தை நம்மேல் வைத்திருக்கும் அன்பை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. (1யோவான் 3:2) இப்படியாக, நம்முடைய பரலோகப் பிதாவினிடம், நம்முடைய இருதயங்கள் இழுக்கப்பட்டிருப்பதினால் நாம் ஒருமித்து ஐக்கியப்பட்டிருக்கிறோம். வெகு சமீபத்தில் வரக்கூடிய மிகப் பெரிய ஐக்கியத்தின், ஒரு சிறிய முன்னோட்டமாக இந்த பூமியில் நாம் பெற்ற ஐக்கியத்தை நாம் பார்க்கலாம். பல வருடங்களாக ஒருவர் பின் ஒருவராக வந்த நம்முடைய மூத்த சகோதரர்கள் - பிதாவினிடத்தில் உண்மையாக அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கும் பரலோக மகிமையான காரியங்களுக்கு நம்முடைய கவனத்தை திசைதிருப்பிக் கொண்டு வருகிறார்கள். இவர்களின் முயற்சியால் நாம் ஓரளவுக்கு பிடிப்பட்டு, நம்முடைய மனகண்களால் இந்த ஆவிக்குரிய ஐக்கியத்தின் காட்சியை அதாவது தேவனுடைய வீட்டில் நடக்கக்கூடிய ஒரு மாநாட்டைக் காணமுடிகிறது. விசுவாசத்தில் நிலைத்திருந்தால் நாமும் அங்கீகரிக்கப்படுவோம்.

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்." (எபிரெயர் 12:22-24) என்று இங்கு சொல்லப்பட்டிருக்கும் காட்சியை நாம் மனக்கண்களில் கண்டிருக்கலாம்.

ஆபேல் கிறிஸ்துவுக்கு நிழலாக இருக்கிறார். நம்முடைய ஆண்டவராம் இயேசுவைப்போல, அங்கீகரிக்கப்பட்ட பலியைச் செலுத்தினதால் ஆபேல் கொல்லப்பட்டார். தேவன் அங்கீகரிக்கக்கூடிய ஊழியத்தைச் செய்வதற்காக - நாம் பெற்ற கிருபையை இறுகப்பற்றிக் கொண்டவர்களாக நமக்கு நியமித்திருக்கும் பணிகளை பயத்தோடும், பக்தியோடும் நிறைவேற்றுவோமாக.

## உலகத்திற்கு நம்பிக்கை

சபைக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் பரலோக மகிமையான, ஐசுவரியமுள்ள ஆசீர்வாதங்களை மட்டுமே நாம் குறிப்பிடாமல், பொதுவாக முழுமனுக்குலமும் முந்தின சீருக்குக் கொண்டுவரப்பட்டு (ஏதேன் தோட்டத்திலிருந்த நிலை) பூரண நிலைக்கு உயர்த்தப்பட்டு, ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்பதையும் அறிந்திருக்கிறோம். சபையின் கடைசி அங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் மகிமை அடைந்தபின், சகலமும் சீர்பொருந்தக்கூடிய காலத்திற்குரிய ஆசீர்வாதத்தை முழுஉலகத்திற்கும் அளிப்பார்கள். தேவனைத் தேடாதவர்களும், அவரை அறியாதவர்களும், அவருடைய நோக்கத்தை உணராதிருக்கும் அனைவருக்காகவும் பிதாவாகிய தேவனின் எல்லையற்ற ஏற்பாடுகளை நினைக்கும்போது, நிச்சயமாகவே நாம் ஆச்சரியப்படுகிறோம். நமக்குள்ளிருக்கும் பக்தி அதிகரிக்கிறது.

சாத்தானின் குருட்டாட்டமான கிரியைகளின் கீழ் இந்த உலகத்தை நித்தியமாக விடாமலும், நித்தியமான இருளின் கீழ் இந்த உலகத்தை அனுமதிக்காமலும் இருப்பதற்காக நாம் தேவனுக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம், ... முழங்கால் யாவும்எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன். ." (ஏசாயா 35:5, 45:23) என்று தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாக முன்னதாக வாக்களித்திருக்கிறார். இந்த நம்பிக்கை - எல்லா விசுவாச அறிக்கைகள் மற்றும் பாரம்பரியத்திலும் தலைமுறை தலைமுறையாக நிழலிட்டுக்கொண்டு வருகிறது. நம்முடைய தேவனைப் பழிசொல்லுபவர்கள் மற்றும் அவருடைய நாமத்தைத் தூஷிப்பவர்கள் மேலும் நிழலிடுகிறது.

நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து தேவனுடைய இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்திற்கு மையமானவர். அதன் முதல் படியாக இயேசுவின் முதலாம் வருகையில் 3 1/2 வருடங்களில் அவருடைய பூமிக்குரிய பணியை நிறைவேற்றினார். சிலுவையில் அவர் தொங்கியபோது "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி முதல் படியை அவர் முடித்தார்.

பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது உலகத்தின் இரட்சிப்பைக் குறித்த திட்டத்தின் இரண்டாம் கட்டம் துவங்கியது. அந்நேரத்திலிருந்து உடன்படிக்கை செய்த அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகக் கருத்தரிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு செயல்முறை சுவிசேஷயுகம் முழுவதுமாகத் தொடர்ந்து நடைப்பெற்றுகொண்டு வருகிறது. வெகு சீக்கிரத்தில்

இவைகள் நிறைவடைந்து, சபையின் கடைசி அங்கத்தினர்களும் தேர்வு செய்யப்பட்டு சோதனைகளை ஜெயித்து, அங்கீகரிக்கப்பட்ட பலியை செலுத்தி முடிப்பார்கள். அப்பொழுது கிறிஸ்துவின் முழு சபையும் திரைக்கு அப்பால் முதலாம் உயிர்த்தெழுதலில் வல்லமையோடு பங்கடைவார்கள். (வெளிப்படுத்தல் 20:6)

## வருங்காலத்தின் கண்ணோட்டம்

நம்முடைய வேதப் பகுதியில் எபிரெயர் 12:22 ம் வசனத்தில் உள்ள பசுமையான புல்வெளியை சற்று நேரம் சிந்தித்து மகிழலாம். திரைக்கு அப்பால் உள்ள மகிமைகளை நம்முடைய சிந்தையில் கொண்டு வருவோம். இக்காலத்துப் பாடுகளும், சோதனைகளும் இருக்கக்கூடிய குறுகலான வழி கடந்து விட்டது. சபையின் தலைச்சன் பிள்ளைகளின் பொது மாநாடு துவங்கிவிட்டது. அடிக்கப்பட்ட ஆடாகிய , நம்முடைய ஆண்டவராம் இயேசு அங்கு முதலில் இருப்பதைக் காணலாம். நாம் தேவனிடத்தில் சேரவும், முழு மனுக்குலமும் புதிதான ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கும் நம்முடைய ஆண்டவராம் இயேசு பரலோகத்திலிருந்து வந்து, பாடுபட்டு மரித்தார். நம்முடைய ஆண்டவரும், இரட்சகரும், பரிந்துபேசுகிறவரும், நம்மை சிநேகிதர் என்று அழைத்தவருமாகிய இயேசுவின் வழியாக தேவனுடைய சகல ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றதற்காக, நாம் அவருக்கு தக்க கனத்தையும், மகிமையையும் நேரடியாக செலுத்துவதற்கு வாய்ப்பைப் பெறுவோம். மகிமை அடைந்த சபை தன்னுடைய இரட்சகரோடு இணையக்கூடிய அந்த நாள் ஒரு அற்புதமான நாளாக விளங்கும்.

அடுத்து, மணவாட்டியாக இருக்கும் அனைவரும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளலாம். அதற்குபின், நம்முடைய ஆண்டவரால் கனப்படுத்தப்பட்ட பிரதிநிதிகளாகிய அப்போஸ்தலர்களைக் காண நாம் ஆவலோடு சென்று, அவர்களை நேரில் கண்டு நம்முடைய வாழ்த்துதலை தெரிவிக்கும்போது, அவர்கள் செலுத்திய பலிகளை முழுமையாகவும் தெளிவாகவும் உணரலாம். அடுத்து, மற்ற விசுவாசமுள்ள பரிசுத்தவான்களும், அறிமுகப்படுத்தப்படுவார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி நிச்சயமாக நாம் எதிர்பார்த்திராத சிலரை அங்கு காணலாம், மேலும் அங்கு இருப்பார்கள் என்று நாம் நிச்சயமாக எதிர்ப்பார்த்த சிலர் அங்கு இருக்க மாட்டார்கள். ஒருவேளை சிலர் நம்மைக் கண்டு ஆச்சரியப்படலாம். ஆனாலும் தேவனுடைய அன்பான குமாரனின் சாயலை ஒவ்வொருவரும் பெற்றிருப்பார்கள். (ரோமர் 8:29)

## மகிமை அடைந்த நட்சத்திரங்கள்

"... மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.." போல முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையக்கூடியவர்களின் நிலைமையும் இருக்கும். (1கொரிந்தியர் 15:41) ஆனால் அனைவரும் பிரகாசமுள்ள நட்சத்திரங்களாக இருப்பார்கள். ஏனெனில், கிரயத்துக்கு கொண்டவருக்காக தங்களுடைய சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை இவர்கள் மகிமைப்படுத்தினவர்கள். (1கொரிந்தியர் 6:20) கீழ்ப்படிந்த தூதர்கள் அனைவரும் பாவமற்று இருப்பதால், அவர்கள் உயர்வான கனத்திற்குரிய மகிமையைப் பெற்றிருப்பார்கள். ஆனால், கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையின் மகிமை வேறுபட்டதாக இருக்கிறது. பாவத்தில் கருத்தரிக்கப்பட்டு, துர்க்குணத்தில் உருவாக்கப்பட்ட அவள் (சங்கீதம் 51:5) பரலோக அழைப்பிற்கு செவி கொடுத்து, நீதி மற்றும் சத்தியத்தினிமித்தம் துன்பப்பட்டு சகோதரர்களுக்காக உபத்திரவப்பட்டவள். இந்த காரணத்திற்காக அவள் முற்றிலுமாக வெற்றி பெற்றாள் என்று பாராட்டப்படுவாள்.

அதற்குபின் ஒரு வேளை எண்ணிலடங்காத தூதர்களின் கூட்டத்தோடு நம்முடைய சிருஷ்டிகருக்கு முன்பாக நாம் அழைத்துச் செல்லப் படலாம். நம்முடைய இரட்சகரின் பிறப்பை அன்னை மரியாளிடம் அறிவித்த பிரதான தூதர்களில் ஒருவராகிய காபிரியேல் நிச்சயமாக அங்கு இருப்பார். நாம் பெற்ற பூரண ஞானத்தினால் அங்குள்ள அனைவரையும் அறிந்து கொள்ளலாம். ".... இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.... " (1கொரிந்தியர் 13:12) இப்போது விசுவாசத்தினால் கண்ணாடியில் பார்ப்பதுபோல நிழலாட்டாமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அப்போது முகமுகமாய் பார்ப்போம்.

தேவனுடைய இராஜ்யத்திற்காக நாம் வழிநடந்த புனித பயணத்தின்போது விசேஷமாக நமக்கு பணிவிடை செய்த தூதர்களைப்பற்றி நாம் அறிந்துகொள்வோம். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா ? .." (எபிரெயர் 1:14) என்ற பவுலின் வார்த்தைகளை அப்போது நாம் நினைவுக்குக் கொண்டுவருவோம். மேலும் " அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் .. " (மத்தேயு 18:10) என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளையும் நினைவுக்கூறலாம்.

ஒரு வேளை நம்முடைய உலகப்பிரகாரமான வெவ்வேறு சம்பவங்களில் நாம் பெற்ற அனுபவங்களையும், தேவனுடைய பிரதிநிதிகளாக அவர்கள் நம்மை வழிநடத்திய விதங்களையும், பாதுகாத்த முறைகளையும், தெய்வீக வாக்குறுதியின் அடிப்படையில் அவர்கள் செய்த உதவிகளையும் நிச்சயமாக நமக்கு அறிவிப்பார்கள்.

இறுதியாக நம்முடைய பரலோகத் தந்தையின் பிரசன்னத்திற்குத் தீவிரிப்போம். நாம் அனைவரும் அவரை முகமுகமாய் தரிசிப்போம். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, சகல கனத்தையும், மகிமையையும், துதிகளையும் செலுத்துவோம். நம்முடைய இரட்சகர் தாமே நம்மை பிதாவினிடத்தில் அறிமுகப்படுத்துவார் "என்றும் வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது

மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக..." (யூதா 24,25) என்று வசனங்கள் கூறுகிறது. ஆம், "அந்தப்படியே - நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." (ரோமர் 3:10) ஆனால் இயேசு கிறிஸ்துவின் வழியாக நாம் மீட்கப்பட்டு, அவருடைய வார்த்தையினாலும், நம்முடைய இருதயத்தில் நாம் கொண்ட விருப்பத்தினாலும் நாம் பெற்ற அனுபவங்களினால் நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலையைப் பெற்றுள்ளது.

## முதலாம் உயிர்த்தெழுதல்

முடிவு பரியந்தம் விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தால் முதலாம் உயிர்த்தெழுதலின்போது ஒரு பிரமாண்டமான மாற்றத்தை நாம் அனுபவிப்போம். பவுல் கூறியதுபோல - "மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும், அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்து..." (1கொரிந்தியர் 15:42,44) நாம் அவரோடுக்கூட எப்போதும் இருப்போம்.

"....ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது...." (வெளிப்படுத்தல் 19:7) மணவாளனுக்கு முன்பாக கொண்டு வரப்படும் மணவாட்டியை இவ்விதமாக வசனங்களில் காட்டப்படுகிறது. அதை தொடர்ந்து கலியாண விருந்து பரிமாறப்படுகிறது. (வெளிப்படுத்தல் 19:9) பூமியிலோ, பரலோகத்திலோ, இந்நாள் வரை இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைப்பெற்றதில்லை. இது மகிழ்ச்சியின் விருந்தாயிருக்கும்.

சங்கீதம் 45:10-15 வசனங்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையை தீர்க்கதரிசனமாகவும் அடையாளமாகவும் சித்தரிக்கிறது. இங்கு மணவாட்டி வகுப்பார் -"இராஜ குமாரத்தி" என்று அழைக்கப்படுகிறார்கள். அவளுடைய மகிமையை பொன் சரிகையினால் நெய்யப்பட்ட "சித்திரத்தையலாடைக்கு" ஒப்பிடப்படுகிறது. அவள் பெற்ற மகிமையானது அவள் பெறப்போகிற பொறுப்புகளுக்கும், கனத்திற்கும் மட்டும் அல்லாமல், அவள் அடைந்த மேன்மையான குணலட்சனங்களுக்காக அந்த மகிமையைப் பெறுகிறாள். ஆட்டு குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியின் அற்புதமான மகிமையும் கனமும் எவ்வளவு அருமையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தெய்வீக இரக்கத்திற்கும் கிருபைக்கும், ஆசீர்வாதங்களுக்கும், அழைக்கப்பட்ட அழைப்பைத் தெளிவாக உணரக்கூடிய யாவரும் இக்காலத்து ஜீவனை அர்ப்பணித்து, தாங்கள் செலுத்தக்கூடிய சின்னசின்ன பலிகளும் அங்கீகரிப்பைப் பெறுவதற்குப் பாத்திரமானவைகள் அல்ல என்பதை உணர்ந்து, அப்படிப்பட்ட பலிகளை நம்முடைய மீட்பரின் ஈடுபலியினால், அங்கீகரிக்கப்படுவதை அறிந்து, நாம் அவருடைய மணவாட்டிகளாக இணைக்கப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் தயக்கமின்றி இதற்கான விலையைச் செலுத்துவார்கள்.

நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் (1தெசலோனிக்கேயர் 5:24) நாம் கேட்பதற்கும், யோசிப்பதற்கும் மேலாகவும் அதிகமாகவும் அவர் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்ற அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார். (எபேசியர் 3:20) "அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன்"

சில நொடிகளில், வருங்காலத்தின் அற்புதமான காட்சிகளை நாம் கண்டோம். இப்போது நம்முடைய உண்மையான நிகழ்கால வாழ்க்கைக்குத் திரும்புவோம். நாம் சம்பாஷித்த வாக்குத்தத்தங்கள் வருங்காலத்தில் நிறைவேறக்கூடியதாக இருக்கிறது சுமார், 1900 வருடங்களாக சபை தன்னுடைய இறுதி கட்டத்தை நெருங்கி கொண்டிருக்கிறது. "... இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது." (ரோமர் 13:11) ஆனால் நாம் இன்னும் திரைக்கு இப்பக்கமே இருக்கிறோம். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதற்கு நாம் இந்நேரம் வரைக்கும் சீர்பொருத்தப்பட்டு கொண்டிருக்கிறோம். அனைவரும் மறுரூபமாக்கப்பட்டபின் மனுக்குலத்திற்கும் தேவனுக்கும் இடையில், ஆண்டவராம் இயேசு சமாதானத்தை உண்டாக்கி, புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைக் கொடுப்பார். இந்த வேலைகளைப் பகிர்ந்துகொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். உலகத்தின் மீட்புக்கான முழுகிரயமும், கல்வாரியில் இயேசு செலுத்திய விலையேறப்பெற்ற பலியில் உள்ளது. நம்முடைய பங்கை இயேசுவோடு இணைக்கவும், இந்த பூமிக்குரிய விருப்பங்களை நாம் முழுமையாக அடக்கம்பண்ணி, வருங்காலத்தில் அவருடைய இராஜ்யத்தில் அவரோடுகூட அவருடைய வேலைகளில் பங்கெடுப்பதற்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

பேசுகிறவருக்கு நாம் கட்டாயமாக செவிகொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறோம். (எபிரெயர் 12:25) உலகத்தார் அழைப்பை ஏற்றுக்கொள்வதில்லை. இந்த யுகத்தில் கேட்கக்கூடிய காதுகளை உடையவர்களுக்கும், காணக்கூடிய கண்களை உடையவர்களோடு மட்டுமே அவர் பேசுகிறார். (லூக்கா 8:8, நீதிமொழிகள் 29:13) பிதா இழுத்துக்கொண்டவர்களை, தன்னோடு பங்காளிகளாக இருப்பதற்கு இயேசு அழைக்கிறார். (யோவான் 6 : 44)

நாம் ஏற்ற காலத்தில் செலுத்தக்கூடிய பலிகள், தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்கு நம்முடைய ஆண்டவர் ஒரு வழியை திறந்திருக்கிறார். நம்முடைய பரலோகத் தந்தையின் அன்பைக்குறித்து அவர் கூறியிருக்கிறார். "....பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். (யோவான் 16:27) பிதாவினால் இழுத்துக்கொள்ளப்பட்டவர்கள் மேல் அவர் வைத்த அன்பையும் பராமரிப்பையும் அவர் விவரிக்கிறார். பிதா நமக்காக வாக்களித்த சகலத்தையும் செய்வதற்கு


அவர் உத்தரவாதம் கொடுக்கிறார். நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ள நமக்கு தேவையான சகல உதவிகளையும் செய்கிறார். நாம் தவறினால், நம்மேல் குற்றம் சுமரும். ஏனெனில் சகலத்தையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவான கிரியைகளை அவர் வல்லமையோடு செய்து வருகிறார். (ரோமர் 8:28)

மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டதினால் நாம் ஆசீர்வதிக்கப்பட்ட காதுகளைப் பெற்றிருக்கிறோம். நாம் அவருடைய சத்தத்தைக் கேட்டதினால் ஒரு புதிய ஜீவனை முன்னதாகவே பெற்றிருக்கிறோம். மரித்திருந்த நாம் புது சிருஷ்டிகளாக ஜீவனைப் பெற்றிருக்கிறோம். தொடர்ந்து அவருடைய செய்திகளைக் கேட்டறிந்தால், வாக்களிக்கப்பட்ட அனைத்து தெய்வீக வாக்குறுதிகளும் நமக்குள் நிறைவேற்றப்படும். ஆனால் இங்கு சொல்லப்பட்ட அனைத்து காரியங்களும் நிறைவடைய நம்முடைய பங்கு அதிகமாக இருக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே தெய்வீக வாக்குத்தத்தங்களில் உள்ள தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளுக்கும், ஒவ்வொரு அம்சங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அநேக விதமான நம்பிக்கைகளையும், வெகுமதிகளையும் கொடுப்பதாக சொல்லிக்கொண்டு, பல திசைகளிலிருந்து பலர் நம்மை அழைத்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டதினால் (மத்தேயு 13:46) நம்முடைய வாழ்நாட்களில் உள்ள நேரத்தையும் பலத்தையும் முழுமையாக தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். வரக்கூடிய இராஜ்யத்தின் மகிமைகளை விசுவாசத்தின் கண்களின் மூலமாகக் கண்ட நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம். இந்த மகிமையான ஆசீர்வாதங்களை நித்தியமாக பெறுவது எவ்வளவு இன்பமாக இருக்கும் ? வெகு சீக்கிரத்தில் இந்த பொதுமாநாட்டில் கலந்துகொள்வதற்கு நாம் அனுமதிக்கப்படுவோம். "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கு...." (எபிரெயர் 12:23)

முதலாம் உயிர்த்தெழுதலில் நம்முடைய ஆண்டவர் நமக்கு வாக்களித்த மகிமை, கனம் அழியாமையைப் பெற்றுக்கொள்வதற்கான விசேஷித்த இரக்கங்களையும், வாய்ப்புகளையும் குறித்த சிந்தனைகள் மட்டுமே நம்முடைய மனகண்களுக்கு முன்பாக இருக்கவேண்டும். நியமிக்கப்பட்ட சகல காரியங்களையும் நிறைவேற்றத்தக்கதாக, மரணத்திற்குள்ளாக இறங்கினவரே பரலோகத்திற்கும் ஏறினார். அதற்குபின் "..நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்." (எபேசியர் 4:11,12,13)

நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு இந்த சிந்தனைகள் நமக்குள் தேவையான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கக்கடவது. ஏனெனில் " அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்" என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறார்.

# சட்டத்திற்குள் கட்டுப்படாத மனுஷன்



அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும் - IIபேதுரு 1:19

- David Rice

சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள பரிசுத்தவான்கள், சத்தியத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக, வசனங்களின் அடிப்படையானப் போதனைகள், வரிசைப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசன உபதேசங்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் தானியேலின் தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடத்தக்கவைகள். அந்த தீர்க்கதரிசனங்களை எழுதின தானியேலும், புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு அந்த தீர்க்கதரிசனங்கள் வெகு தொலைவில் உள்ள எதிர்காலத்தைக் குறித்து முன் அறிவித்தது. ஆனால் குறித்தக் காலத்தில் "ஞானவான்கள் புரிந்துகொள்வார்கள்" (தானியேல் 12:10) என்று எழுதப்பட்டது. அந்த குறித்தக்காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே நியாயமாக இந்த தீர்க்கதரிசனங்களின் விளக்கத்தை சபை இப்போது எளிதில் புரிந்துகொள்ளும். விசேஷமாக, "இருளில் உள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற அவ்விளக்கைப் போன்ற வசனங்களை கவனித்திருப்பது நலமாக இருக்கும்." என்று பேதுருவின் ஆலோசனையை ஏற்றுக்கொள்பவர்கள் நிச்சயமாக புரிந்துகொள்வார்கள்.

**தானியேலின் முன்னறிவிப்பு**

இந்த வசனம் - " உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்." (தானியேல் 7:25) மிகப்பெரிய அளவில் எழும்பக்கூடிய கொடுமையான உபத்திரவங்களைப் பற்றி தெளிவாக அறிவிக்கக்கூடிய தானியேலின் தீர்க்கதரிசனத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

மிகக் கொடிய உபத்திரவக்காரனான இவனை, பரிசுத்தவான்கள் ஆர்வத்தோடு அடையாளம் கண்டுபிடிப்பதன் நிமித்தம் -

1. அந்த உபத்திரவக்காரனோடு எந்தவிதத்திலும் ஐக்கியப்படாமல் தங்களைக் காத்து கொள்ளலாம்.
2. அதன் வஞ்சகங்களுக்கு எச்சரிப்பாக இருக்கலாம்.
3. அதன் வல்லமையிலிருந்து விலகிவிடலாம் மற்றும்,
4. மேல் சொல்லப்பட்டக் காரியங்களைச் செய்து, நெருக்கமான வாசல் வழியாக மற்றவர்களையும் அழைத்துச் செல்ல அவர்களை ஊக்குவிக்கலாம்.

இந்த உபத்திரவக்காரனை அடையாளம் கண்டுபிடிப்பது - வேத மாணவ இயக்கத்திற்கு கடினமல்ல. இது ரோம கத்தோலிக்க சபையே. பாஸ்டர் ரசல் எழுதிய இரண்டாம் தொகுப்பில், 9ம் அதிகாரத்தில் "பாவ மனுஷன் - அந்திக்கிறிஸ்து" என்ற தலைப்பு - இந்த உபத்திரவக்காரனுக்காகவே முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பைப்பற்றிய காரியங்களைக் குறித்து -சரித்திரத்திலும், தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட வசனங்களையும் இணைத்து சுமார் 95 பக்கங்களில் மிகச் சிறப்பான விளக்கவுரையை இந்த தொகுப்பில் நாம் காணலாம்.

மேலும் பாஸ்டர் ரசல் எழுதின மூன்றாம் தொகுப்பில், மூன்றாம் அதிகாரத்தில் "இராஜ்யத்திற்காகக் காத்திருக்கும் நாட்கள், தானியேல் 12" என்ற தலைப்பின் கீழ் உள்ள 35 பக்கங்களில் - போப் அமைப்பின் உபத்திரவக் காலம் 1260 (கிபி 539-கிபி 1799) வருடங்கள் என வசனங்கள் குறிப்பிடுவதாக, இந்த பகுதி தெளிவாக விவரிக்கிறது. இந்த தொகுப்புகளை இதுவரைக்கும் வாசிக்காதவர்கள் தயவு செய்து வாசித்து அறிந்துகொள்ளவும்.

மேலும், அந்த பக்கங்களில் -1260, 1290 மற்றும் 1335 என்று தானியேல் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று காலங்களைப் பற்றின அர்த்தங்களின் பிரமாதமான விளக்கத்தையும், நாம் காணலாம். முதலாம் வருடம் போப் மார்க்கம் மிகுந்த வல்லமையோடு செயல்பட்டதற்கு அருகில் நம்மை கொண்டு செல்கிறது. இரண்டாம் வருடம், இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்தவர்கள் மத்தியில், தானியேலின் தீர்க்கதரிசனங்கள் ஏற்படுத்திய ஒரு இயக்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. மற்றும் மூன்றாம் வருடம் இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தின் துவக்கமாகிய 1874ம் வருடத்தைக் குறிப்பிடுகிறது.

கிபி 29 ம் வருடம் நம்முடைய ஆண்டவர் இந்த பூமிக்குரிய ஊழியத்தைத் துவங்கி நாற்பது வருடங்களில், யூதர்களின் காலத்தில் ஆலயமும், எருசலேம் நகரமும் ரோமர்களால் சுட்டெரிக்கப்பட்டது. அதேபோல, நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னம் துவங்கின 1874ம் வருடத்திலிருந்து 40 வருடங்களுக்குபின், 1914ம் வருடத்தின் துவக்கத்தில் வரலாற்றில் முன் என்றும் நடைபெறாத "உபத்திரவத்தின் காலம்" வந்தது. அந்த வருடத்தில் முதலாம் உலகப்போர் துவங்கியது. அதை தொடர்ந்து 1939ம் வருடம் இரண்டாம் உலகபோர் துவங்கியது. மிகப்பெரிய சர்வாதிகாரங்கள் நொருங்கியது. இப்போது வரக்கூடிய அர்மெகதோன் நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

**இரகசியம், மகா பாபிலோன்**

பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தின ரோம கத்தோலிக்க சபை, புரோட்டஸ்டன்ட் வகுப்பினரால் பல நூற்றாண்டுகளுக்குமுன் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. வெளிப்படுத்தல் 17ம் அதிகாரத்தில் இந்த அமைப்பை "பரிசுத்தவான்களின் இரத்தத்தையும் இயேசுவின், இரத்த சாட்சிகளின் இரத்தத்தையும்" குடிக்கும் ஒரு வேசிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. (வெளிப்படுத்தல் 17:6) உண்மையில், கிறிஸ்துவின் மேல் விசுவாசம் இல்லாமல், தற்காலிகமான வல்லமைகளைப் பெறுவதற்கு பூமியின் இராஜாக்களேடு ஐக்கியப்பட்டிருப்பதால் அந்த அமைப்பு "வேசிக்கு" ஒப்பிடப்படுகிறது. அவள் நெற்றியில் "அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்." என்று எழுதப்பட்டிருந்தது. கடந்த இருண்ட காலத்தைப் புரட்டிப் பார்க்கையில், உயர்ந்த பதவிகளில் அமர்ந்துகொண்டு அவள் நடப்பித்த மோசமான செயல்களும், பொறுத்துக்கொள்ள இயலாத அவளின் உபத்திரவங்களும் மனசாட்சிக்குக் கட்டுப்படாத அவளின் ஒழுக்கக்கேடுகளையும், வெளிப்படுத்தும். இவை அனைத்தும் தலைப்புக்கு ஏற்ற நீதியாயிருந்தது.

துரோகியான இந்த ஸ்திரீ "ஏழு மலைகளின்" மேல் அமர்ந்து ஆட்சிசெய்து கொண்டிருந்தாள். (வசனம் - 9) மேலும் "நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான்." (வசனம் 18) ஏழு மலைகள் உள்ள நகரமாகிய ரோமாபுரியில் போப்மார்க்கம், உயர்ந்த பதவியில் அமர்ந்து, ஐரோப்பாவின் பெயர்கிறிஸ்துவ இராஜாக்களை வல்லமையோடு ஆட்சி செய்தது.

## பாவ மனுஷன்

நம்முடைய ஆண்டவரின் வருகையில், மரித்த பரிசுத்தவான்கள் தங்களுடைய பரிசைப் பெற்றுக்கொள்ள எழுந்திருப்பார்கள் என்று பவுல் 1தெசலோனிக்கேயர் 4:13-18ம் வசனங்களில் கூறுகிறார். மேலும், இயேசு வருவதவற்கு இன்னும் பல வருடங்கள் செல்லும் என்பதை சகோதரர்களுக்கு உறுதிப்படுத்த தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிரூபத்தின், இரண்டாம் அதிகாரத்தில் பவுல் மீண்டுமாக ஆண்டவரின் இரண்டாம் வருகையைப்பற்றி பேசுகிறார். "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனெனனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்." (11தெசலோனிக்கேயர் 2:3,4)

பவுல் வந்திருந்தபோது இதை குறித்துப் பேசினார், என்பதை ஐந்தாம் வசனத்தில் அவர் நினைப்பூட்டினார். மேலும், தானியேல் 7 :26ம் வசனத்தை மேற்கோள்காட்டி எழுதப்பட்ட எட்டாம் வசனம், "பாவ-மனுஷனைப்" பற்றிய சிந்தனைக்கு தானியேலின் தீர்க்கதரிசனங்களில், விசேஷமாக தானியேல் ஏழாம் அதிகாரம் அஸ்திபாரமாக அமைந்திருப்பதைக் காட்டுகிறார்.

## தானியேல் ஏழாம் அதிகாரம்

தானியேல் ஏழாம் அதிகாரம் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியது. இங்கு, தானியேல் புத்தகத்தின் இரண்டாம் பகுதி துவங்குகிறது. அதில் தானியேல் கண்ட நான்கு சொப்பனங்களும், தரிசனங்களும் உள்ளது. (மாறாக, தானியேல் புத்தகத்தில் உள்ள முதல் ஆறு அதிகாரங்களும், வரலாற்று அனுபவங்களையும் நேபுகாத்நேச்சாருக்கு தானியேல் விவரித்த சொப்பனத்தைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. )

முதலாம் சொப்பனமானது சமுத்திரத்திலிருந்து எழும்பின நான்கு மிருகங்களைப் பற்றியது. இந்த நான்கு மிருகங்களும் வேதாகமத்தில் சொல்லப்பட்ட, தேசங்களை ஆட்சி செய்வதற்கு அனுமதி பெற்ற, பூமிக்குரிய நான்கு சாம்ராஜ்யங்களை அடையாளப்படுத்துகிறது. (தானியேல் 7:1,17) அப்போது ஆட்சிசெய்து கொண்டிருந்த பாபிலோன் சாம்ராஜ்யம் முதலாம் இராஜ்யமாகவும், அடுத்து மேதோ - பெர்சியா மற்றும் கிரேக்க சாமராஜ்யத்தின் ஆட்சியும் (தானியேல் 8:20 21) நான்காவதாக, "கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்த " மற்ற இராஜ்யங்களைக் காட்டிலும், மிக வல்லமையான ரோம இராஜ்யம் கடைசி இராஜ்யமாக ஆட்சி செய்தது.(தானியேல் 7:7)

அந்த மிருகத்தின் பத்து கொம்புகளும், ரோம சாம்ராஜ்யம் ஆட்சி செய்த பத்து தேசங்கள் என்று எட்டாம் வசனம் கூறுகிறது. அதில் ஒரு கொம்பு மற்றவைகளை விட அதிகமாக வளர்ந்து அவைகளை தன் கட்டுபாட்டிற்குள் வைக்கும் என்றும், அதற்கு " இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்றுபிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது. " (தானியேல் 7:8 மற்றும் வெளிப்படுத்தல் 13:5,6 வசனங்களை ஒப்பிட்டு பார்க்கவும்) இந்த அமைப்பு பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து அவர்களோடு எதிர்த்துநின்று..." நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும்,இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்." (தானியேல் 7:21,22)

இந்த தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து, அதில் உள்ள செய்திகளைத் திரட்டுவது பவுலுக்கு கடினமாக இருக்கவில்லை. ரோம சாம்ராஜ்யத்தின் இறுதி நாட்களில், ஒரு சாம்ராஜ்யம் எழும்பும் என்றும், அரசியல் வல்லமையில் உச்சநிலைக்கு வளர்ந்து, தேவனுடைய பரிசுத்தவான்களை நீண்ட காலம் துன்புறுத்தி இறுதியில் நியாயந்தீர்க்கப்பட்டு, அதன் அதிகாரத்தை இழந்து, அழிக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். (தானியேல் 7:26)

தானியேல் 8:11,12 மற்றும் தானியேல் 11:31-35 வசனங்களில் உள்ள தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில் - இந்த கொடுமையான வல்லமை, மதத்தின் வழியாக, கிறிஸ்துவ விசுவாசத்திலிருந்து எழும்பும் என்று பவுல் கருதினார். இயேசு பேசின சில உவமைகள், இதனுடைய வளர்ச்சி மற்றும் எச்சரிப்புகளும் இதனோடு ஒத்திருக்கிறது. (மத்தேயு 13:25, 32,33)

இந்த தீர்க்கதரிசனங்களைத் தேடி, ஆய்வு செய்து தெளிவாகப் படித்தறிந்த பவுலைப் போல நாமும் இருக்கவேண்டும். பரிசுத்தமான சிந்தையில் இவைகள் அனைத்தையும் சேகரித்தப்பின், தெசலோனிக்கேயருக்கு கடிதம் எழுதினார் - "அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும்." (11தெசலோனிக்கேயர் 2:6-10 )

இப்படியாக அனைத்தும் நடந்தது. கான்ஸ்டான்டைன் ரோம சாம்ராஜ்யத்தைக் கீழ்ப்படுத்திக்கொண்டபோது, கிறிஸ்தவர்களின் உபத்திரவங்கள் குறைந்தது. அப்போது தலைமை குருக்களும், சபையின் மத அதிகாரிகளும் மிகுந்த ஆர்வத்தோடு அவனுக்கு இசைந்து செயல்பட்டார்கள். சில வருடங்களுக்குப் பின் கிபி 325ம் வருடம் நிசியாவில் ஆலோசனை குழுவில், திருத்துவம் என்ற போதனை உறுதிப்பட்டது. கிபி 533ம் வருடத்திற்குள், எல்லா சபைகளையும் மேற்பார்வையிடும் பொறுப்பை சக்கரவர்த்தியான ஜஸ்ட்டினியன் ரோம குருவுக்கு கையளித்து, அவனை உயர்த்தினான். கிபி 538ம் வருடத்திற்குள் போப் (ரோம சாமராஜ்யத்தின் தலைமை குரு) என்று அழைக்கப்பட்ட மத தலைவருக்கு அரசியல் வல்லமைகளும் கொடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து வந்த 539ம் வருடம், அவனுக்கு போட்டியாக வந்த ஆஸ்ட்டிரோகோத் (ஆரியர் வம்சவழி வந்தவர்கள்) தங்களுடைய தலைநகரமாகிய ராவென்னாவுக்கு விரைந்தார்கள். போப் மார்க்கம் முழு அரசியல் வல்லமையோடு ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

1260 வருடங்களுக்குபின், 1799ம் வருடத்தில், நெப்போலியனால் 1798ம் வருடம் சிறைபிடிக்கப்பட்ட போப் பையஸ் -6 பிரான்சில் உள்ள வாலன்ஸ் நாட்டில் மரித்தான். அவன் மரணத்திற்குபின் வேறொரு போப்பை தேர்வு செய்வதற்கு நெப்போலியன் அனுமதிக்கவில்லை. ஆகவே கொஞ்ச காலத்திற்கு போப்மார்க்கம் தலைத்தூக்கவில்லை. சில மாதங்களுக்குப்பின் ஒரு புதிய போப் தேர்வுசெய்யப்பட்டபின் கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய வல்லமைகளைப் பெறத்துவங்கியது. ஆனால் 1260 வருடங்கள் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தின அளவுக்கும் மற்ற இராஜாக்களை ஆட்சிசெய்யும் அளவுக்கும் அது வல்லமை பெறவில்லை. தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட 1260 வருடங்கள் முடிவுக்கு வந்தது.

## சட்டத்திற்குக் கட்டுப்படாத மனுஷன்

ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் 11தெசலோனிக்கேயர் 2:3ம் வசனத்தில், "பாவ மனுஷன்" என்ற வார்த்தையை நாம் காணமுடிகிறது. வேதாகமத்தில் இந்த ஒரு வசனத்தில் மட்டுமே காணப்படும் இந்த வார்த்தை, கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகப்பிரபலமானது.

ஆயினும், வேறு புதிய மொழிபெயர்ப்புகளில் "சட்டத்திற்குக் கட்டுப்படாத மனுஷன்" என்று வித்தியாசமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (NASB.NIV, Rotherham, Marshall's Interlinear)

இது மொழிபெயர்ப்பினால் வந்த பிழையல்ல. கைப்பிரதிகளில் உள்ள வித்தியாசத்தினால் ஏற்பட்ட ஒரு மாற்றமாக இருக்கிறது. மூல கைப்பிரதிகளில் "அனோமியாஸ்" என்ற கிரேக்க வார்த்தை காணப்படுகிறது. அதற்கு "சட்டத்திற்கு புறம்பான அல்லது கட்டுபடாத" என்ற பொருள். "அமார்ட்டியாஸ்" என்ற மற்றொரு கிரேக்க வார்த்தைக்கு "பாவம்" என்று பொருள். மார்ஷல் கிரேக்க பிரதியில் அனோமியாஸ் என்ற வார்த்தை காணப்படுகிறது. வில்ஸன் கிரேக்க பிரதியில் அமார்ட்டியாஸ் என்ற வார்த்தை காணப்படுகிறது.

இந்த இரண்டு வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த இரு வார்த்தைகளையும் வித்தியாசமான வார்த்தைகளாக இருப்பதினால், அவர்கள் தவறாக எழுதினதுபோல தெரியவில்லை. கைப்பிரதிகளில் உள்ள ஆதாரங்களை வைத்துக்கொண்டு "அனோமியாஸ்" என்ற வார்த்தைக்கு பதிலாக "அமர்ட்டியாஸ்" என்ற வார்த்தையை யாரோ ஒருவர் மாற்றியிருக்கவேண்டும். "சட்டத்திற்குப் புறம்பான" என்ற வார்த்தைக்குப் பதிலாக "பாவம்" என்று எழுதுவது மிகச்சரியாகப் பொருந்தும் என்றும் "சட்டத்திற்குப் புறம்பான" என்ற வார்த்தையைக் காட்டிலும் அந்த அமைப்பு செய்த கொடூரமான காரியங்களுக்கு "பாவம்" என்ற வார்த்தையின் மூலமாக அந்த அமைப்பைப்பற்றி மேலும் விவரிக்கலாம் என்று எண்ணி ஏதோ ஒரு வேத எழுத்தாளர் மாற்றியிருக்கவேண்டும்.

ஆயினும், பவுல் பயன்படுத்த விரும்பிய - மூல பிரதியிலிருக்கும் "சட்டத்திற்குப் புறம்பான" என்ற வார்த்தையை நாம் எடுத்துக்கொள்வது நலமாக இருக்கும். ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த வேதப் பகுதியில் தொடர்ச்சியாக அந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். "சட்டத்திற்குப் புறம்பான" என்ற வார்த்தையை பவுல் ஏன் தெரிந்துகொள்ளவேண்டும் ?

ஒரு பகுதியான பதிலை தானியேல் 7:25ம் வசனத்தில் வாசிக்கலாம். இந்த அமைப்பானது "காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற" நினைக்கும் என்று இந்த வசனப்பகுதி கூறுகிறது. அவன் தன்னுடைய சொந்த காலங்களையும், நேரங்களையும் ஏற்படுத்துவதினால், அதாவது சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் உட்படாதபடிக்கு காரியங்களைச் செய்வதினால் - "சட்டத்திற்குப் புறம்பான" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்தினார். "நோமோன்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "சட்டங்கள்" என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு முன் சேர்க்கப்படும் "அ" என்ற எழுத்து - "அநோமியாஸ்" சட்டத்திற்கு எதிராக அர்த்தத்தைக் கொடுக்ககூடியதாக இருக்கிறது. (nomon - anomies =சட்டம் -சட்டத்திற்குப் புறம்பான அல்லது கட்டுப்படாத) மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் தானியேல் 7:25ம் வசனத்தில் சொல்லப்படும் அந்த அமைப்பைப் (கொடுமைகளையும் உபத்திரவங்களையும் நடப்பித்த ) பற்றிய விவரங்கள் - பவுல் பயன்படுத்தின "சட்டத்திற்குப் புறம்பான அல்லது கட்டுப்படாத" என்ற வார்த்தையோடு ஒத்துப்போகிறது.

## தானியேல் 11:36

"சட்டத்திற்குப் புறம்பான அல்லது கட்டுப்படாத" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்தினதற்கு மற்றொரு காரணத்தை தானியேல் 11 ம் அதிகாரத்தில் காணலாம். 11தெசலோனிக்கேயர் 2:8ம் வசனத்தில் பவுல் தானியேல் 7:26ம் வசனத்தைக் குறிப்பிடுவதை நாம் முன்னதாகவே பார்த்தோம். 11தெசலோனிக்கேயரில் உள்ள வேதப் பகுதியில் -சட்டத்திற்குக் கட்டுப்படாத அந்த மனுஷனை - "அழித்து.... நாசம்பண்ணுவார் " என்று வாசிக்கிறோம். அதேபோல, "... அவனைச் சங்கரிக்கும்படியாகவும், அழிக்கும்படியாகவும்...." என்று தானியேலில் உள்ள வேதப்பகுதி கூறுகிறது. இப்படிப்பட்ட ஒரு ஒப்புமையை 11தெசலோனிக்கேயர் 2:4 மற்றும் தானியேல் 11:36ம் வசனங்களிலும் காணலாம்.

"அவன் **எதிர்த்துநிற்கிறவனாயும்,** தேவனெனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை **உயர்த்துகிறவனாயும்,** தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்." என்று 11தெசலோனிக்கேயர் 2:4ம் வசனம் கூறுகிறது.

"ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து**, தன்னை உயர்த்தி**, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, **தேவாதிதேவனுக்கு விரோதமாக** ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்." என்ற தானியேல் 11:36ம் வசனம் கூறுகிறது.

11தெசலோனிக்கேயர் 2:4 வசனத்தில் கூறப்படும் சட்டத்திற்குப் புறம்பான மனுஷனைப்பற்றி விவரிப்பதற்காக, தானியேல் 11:36 வசனங்களில் சொல்லப்பட்ட பரிசுத்தவான்களின் உபத்திரவத்தைக் குறிப்பிடும் காரியத்தை இங்கு ஒப்புமையாக பவுல் காட்டுகிறார்.

தானியேல் 11:36 மற்றும் தானியேல் 12:6 வசனங்களில் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு தொடர்பிருக்கிறதாக சில காரியங்கள் காட்டப்படுகிறது. இந்த உபத்திரவக்காரன் "தேவாதிதேவனுக்கு விரோதமாக **ஆச்சரியமான** காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும். " என்று தானியேல் 11:36ம் வசனம் கூறுகிறது. மற்றும் "சணல்வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த **ஆச்சரியமானவைகளின்** முடிவு வர எவ்வளவுகாலம் செல்லும் என்றுகேட்டான்." என்று தானியேல் 12:6ம் வசனம் கூறுகிறது.

தானியேல் 11:36ம் வசனத்தில் சொல்லப்பட்ட "ஆச்சரியமான" காரியங்கள், தானியேல் 12:6ம் வசனங்களில் கேட்கப்பட்ட கேள்விக்கு விடையாக 1260 வருடங்களாக நீடித்திருந்த ஆச்சரியமானவைகளைப்பற்றி சொல்லப்படுகிறது.

இந்த காரணங்கள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு, தானியேல் 11:36ம் வசனம் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தின, போப்மார்க்கம் என்றும், நம்மால் அறிந்துகொள்ளப்பட்ட மகா உபத்திரவக்காரனைப்பற்றி விவரிக்கிறது என்ற முடிவுக்கு வருகிறோம். "ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து.." என்ற இதே கருத்தை ,தானியேல் 7:25ம் வசனத்திலும் வெளிப்படுத்துகிறது. போப் மார்க்கம் "காலங்களையும் ,பிரமாணங்களையும் மாற்றியது". தான் பெற்ற வல்லமையினால், துணிகரமாக, தான் விரும்பிய காரியங்களைச் செய்தது. ஆகவே இந்த அமைப்பு "சட்டத்திற்குப் புறம்பாகவும், கட்டுப்படாததும், விரோதமாகவும்" இருந்தது.

## மனுஷன்

தானியேல் 11:36ம் வசனம் அந்த மகா உபத்திரவக்காரனைக் குறிப்பதாக பவுல் அடையாளம் காட்டினாலும், அந்த அமைப்பை ஒரு "மனுஷனுக்கும்" ஒப்பிடுகிறார். ஏதோ ஒருவர் இந்த உலகத்தையே வஞ்சித்து, வியக்கத்தக்க காரியங்களை நடப்பித்து, காரணமில்லாமல் அனைவரையும் எதிர்ப்பான் என்று

முன்னதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது, என்று அநேக கிறிஸ்தவர்கள் இதை தவறாகப் புரிந்துகொள்ளுகிறார்கள்.

அந்த உபத்திரவக்காரனை "அந்த இராஜா" என்று தானியேல் 11:36ம் வசனம் குறிப்பிடுவதினால், பவுலும் அந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். இந்த தீர்க்கதரிசனம் தவறான ஒரு அடையாளத்தை இங்கு சுட்டிக்காட்டுவதன் காரணம் என்ன ? பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களுக்கு, இரண்டு நிறைவேற்றங்கள் உண்டு. 1, முதலில் ஒரு சிறிய அளவில் சொல்லர்த்தமான நிறைவேற்றமும், அதற்குபின் 2, முக்கியமான அதனுடைய ஆவிக்குரிய பிரமாண்டமான நிறைவேற்றமும் உண்டு. இதன் அடிப்படையில், இந்த தீர்க்கதரிசனம் முதலில் சொல்லர்த்தமாக நிறைவேறியது. மிகக் கொடூரமாக ஆட்சி செய்து, யூதர்களை சித்தரவதை செய்து, அவர்களின் ஆலயத்தின் பரிசுத்தத்தைக் குலைத்து, அன்றாடபலியை நிறுத்தின அந்த மனுஷன் - "ஆண்டியோக்கஸ் எபிபானியஸை"- பற்றி பேசுகிறது.

சட்டத்திற்குக் கட்டுப்படாத அந்த இராஜாவின் ஆளுகையில் சட்டத்திற்குப் புறம்பானக் காரியங்கள் மிகக் கொடுமையாக நடப்பிக்கப்பட்டது. ஒரு தனிமனிதனால் இப்படிப்பட்ட காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், பிரமாண்டமான தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தில், முழு சுவிசேஷ யுகத்தில் நீண்ட காலமான 1260 வருடங்களில் இன்னும் எவ்வளவு கொடுமையான காரியங்கள் நடந்திருக்கும். தானியேல் 7:8ம் வசனத்தில் சொல்லப்பட்ட அந்த "பெரிய கொம்பும்", தானியேல் 11:36ம் வசனத்திலிருந்து பவுல் குறிப்பிட்ட "சட்டத்திற்குப் புறம்பான அந்த மனுஷன்" மிக வல்லமையுள்ளவனும், நீடிய வருஷங்களாகக் கொடுமைகளை நடப்பிக்கிறவனுமாக அடையாளம் காட்டப்பட்டான். போப் மார்க்கமாகிய அந்த அமைப்பு, சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை முழுமையாக நிறைவேற்றியது. பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ உலகின் மேல், அராஜகம் செய்த அந்த மனுஷன் - போப் மார்க்கமாகிய அந்த அமைப்பு என்பது -இந்த தீர்க்கதரிசனத்தின் முக்கிய நிறைவேற்றமாகும்.

## வெளிப்படுத்தின விசேஷம் 13

**ரோமபேரரசின்** வருங்கால ஆளுநர் - போப்பமைப்பு என்று வெளிப்படுத்தல் 13ம் அதிகாரம், மிக அழகாக சித்தரிக்கிறது. (12அதிகாரத்தின் "சிவப்பான பெரிய வலுசர்ப்பம்) அதை தொடர்ந்து வந்த சாம்ராஜ்யங்களின், கலப்பாக அல்லது கலவையாக இருந்த போப்பமைப்பைக் குறித்து வெளிப்படுத்தல் 13ம் அதிகாரத்தில் எடுத்துரைக்கிறது. அது சிறுத்தை, கரடி, சிங்கம் மற்றும் பத்து கொம்புடையது போலிருந்தது. தானியேல் ஏழாம் அதிகாரத்தில் உள்ள நான்கு ராஜ்யங்களையும் விவரிக்கும் அடையாளங்களாக இருக்கிறது.

தூஷணங்களைப் பேசும் வாயைப் பற்றியும், அது நாற்பத்திரெண்டு மாதங்கள் நீடித்திருக்கும் என்ற அதனுடைய தீர்க்கதரிசன காலத்தைப் பற்றியும் வெளிப்படுத்தல் 13:5ம் வசனம் குறிப்பிடுகிறது. நாற்பத்திரெண்டு மாதங்கள் என்பது 3 1/2 வருடங்கள், "காலம், காலங்கள், அரைக்காலம்" (தானியேல் 12:7,7:25, வெளிப்படுத்தல் 12:14) என்ற காலத்திற்குச் சமமாக இருக்கிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், வெளிப்படுத்தல் 13:5ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தும் அந்த அமைப்பு, தானியேலின் புத்தகத்தில் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட, அதே காரியமாக இருக்கிறது.

ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள், நாற்பத்திரண்டு மாதங்களுக்கு 1260 நாட்கள். வெளிப்படுத்தல் 11:3 மற்றும் 12:6ம் வசனங்களில் இதே காலஅளவு குறிப்பிடப்படுகிறது. 1260 வருடங்களைக் கொண்ட இந்த தீர்க்கதரிசனம் கிபி 539 துவங்கி கிபி 1799 ம் வருடம் முடிவடைந்தது. இந்த தீர்க்கதரிசனமானது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழிநடத்தும் உறுதியான முக்கிய ஆதாரமாய் இருக்கிறது.

சுவிசேஷ யுகத்தில், உபத்திரவப்பட்ட பரிசுத்தவான்களுக்கு, தங்களை உபத்திரவப்படுத்தினவனைப்பற்றிய அறிவு, மிகவும் பிரயோஜனமாக இருந்தது. அந்த அமைப்பின் பாவங்களையும், அதன் போதனைகளையும், விட்டு வருவதற்கும், அவைகளை தவிர்ப்பதற்கும் அது வழிநடத்தியது. ஆகவே இந்த யுகத்தின் இருண்ட காலப்பகுதியில், போப் மார்க்கத்தின் தாக்கத்திலிருந்து தப்பிப்பதற்கு வனாந்தரத்திற்கு விரைந்தோடின ஸ்திரீயைப் (சபை) பற்றி வெளிப்படுத்தல் 12ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். 3 1/2 வருட பஞ்ச காலத்தில் எலியா வனாந்தரத்திற்கு விரைந்தோடின சம்பவம், இதற்கு ஒரு நிழலாக இருக்கிறது.

## கட்டளையல்ல–ஆனால் பயனுள்ளது

கிறிஸ்துவுக்குள் நிலைநிற்கும் பரிசுத்தவான்களுக்கு இந்த தீர்க்கதரிசனங்களின் அர்த்தங்களைக்


கடுமையாக எடுத்துரைப்பதற்கு அவசியமில்லை. ஆனால் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஆகவே "இதிலே **ஞானம்** விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் (போப்பமைப்பு) **புத்தியுடையவன் (ஆவிக்குரிய** காரியங்கள்) கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு. " என்று வெளிப்படுத்தல் 13:18ம் வசனம் கூறுகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொன்னால், இந்த அமைப்பை அடையாளப்படுத்தும் பாவம், துரோகம், வஞ்சகம் மற்றும் ஊழலுக்கு - 666 என்ற எண் சுட்டிக்காட்டப்படுகிறது.

பாழாக்கும் அருவருப்பை அடையாளம் கண்டுகொள்வதற்காகச் சொல்லப்பட்ட நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளையும் நாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். " மேலும்,

பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது," (மத்தேயு 24:15)

இந்த உபத்திரவக்காரனைக் குறித்த ஒரு எச்சரிப்பை நீதிமொழியின் புஸ்தகத்திலும் காணலாம்." என் மகனே, என் ஞானத்தைக் கவனித்து, என் புத்திக்கு உன் செவியைச் சாய்; அப்பொழுது நீ விவேகத்தைப் பேணிக்கொள்வாய், உன் உதடுகள் அறிவைக் காத்துக்கொள்ளும் பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடுபோல் ஒழுகும்; அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமுங் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும். அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்." (நீதிமொழிகள் 5:1-5) எச்சரிப்பின் இந்த வார்த்தைகளைப், பரிசுத்தவான்கள் பல நூற்றாண்டுகளாகக் கவனித்ததுப்போல, நாமும் இந்த எச்சரிப்பின் வார்த்தைகளைக் கவனிப்பது ஞானமான காரியமாக இருக்கும்.

தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு வாசகத்தின் சரியான விளக்கம்



# அனைத்து கிறிஸ்தவர்களும் மரணத்திற்குள் நித்திரை அடையவேண்டுமா?

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். 1கொரிந்தியர் 15:51,52

James Parkinson

இங்கு சொல்லப்பட்ட வசனம் இந்நாள்வரைக்கும், வேதாகமத்தின் அநேக மொழிபெயர்ப்புகளுக்கு முற்றிலும் முரண்பாடான பொருளைத் தருவதினால், இந்த பகுதி அநேக கிறிஸ்தவர்களுக்கு விந்தையாகத் தோன்றலாம். ஆயினும் ஓரளவுக்கு இது சிறந்த கிரேக்க கைப்பிரதிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உண்மையில், மற்ற புதிய திருத்திய மொழிபெயர்ப்புகளை வாசித்தப்பின், ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்ப்புகளை வாசிப்பது சற்று விநோதமாகத் தோன்றுகிறது.

வேத கோட்பாடுகளை நாம் அப்போஸ்தலர்களுக்கு கற்றுக்கொடுக்க முயற்சிக்காமல், நாம் போதிக்கப்படுவதற்கு அவர்களை அனுமதிக்கவேண்டும். இதனால், இந்த வேதப்பகுதியை நாம் புரிந்துகொள்ள முயற்சிப்பது நம்முடைய கடமையாக இருக்கிறது.

புறமதஸ்தினர் ஆத்துமா அழியாது என்று நம்புகிறார்கள். எனவே, நீண்டகாலம் நித்திரையில் இருப்பார்கள் என்ற கருத்துக்கு இடமேயில்லை. ஆகவே நீண்ட காலத்திற்குமுன் மரித்தவர்களின் அனுபவத்திற்கும், யுகத்தின் முடிவில் மரிப்பவர்களின் அனுபவத்திற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஆனால்,மனுஷர் மரித்தவுடன் அவர்கள் உண்மையில் மரித்துவிட்டார்கள் என்று ஆத்தும அழிவைக் குறித்து அறிந்தவர்கள், மரணத்திற்குள்ளிருக்கும் வித்தியாசத்தையும் அறிந்துகொள்வார்கள். சிலர் நீண்ட காலமாக "நித்திரையில்" இருப்பதில்லை, ஆனால் சிலர் வெகுகாலம் அந்நிலையில் இருக்கிறார்கள். இந்த ஒரு குறிப்பை பவுல் கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கு எழுதினார். உலகத்திற்கு அல்ல, உடன்படிக்கை செய்த அவருடைய பிள்ளைகளுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டதினால், இந்த ஒரு காரியத்தை "இரகசியம்" என்ற சுட்டிக்காட்டுகிறார்

இந்த வித்தியாசத்தை பவுல் தெளிவாக விளக்குகிறார். நாம் (விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள்) அனைவரும் நித்திரை அடைவோம் (மரணத்தில்). ஆனால் யுகத்தின் கடைசியில் மரிக்கக்கூடியவர்கள் "ஒரு இமைப்பொழுதிலே" கண் இமைக்கும் நேரத்திலே (மிகக் குறைந்த பட்சமான நித்திரைக் காலம்) மறுரூபமாக்கப்படுவார்கள். கடைசி எக்காளம் தொனிக்கும் **அந்நேரத்தில்** இந்த மாற்றம் ஏற்படாது, மாறாக அது தொனிக்கும் **போது** மாற்றம் ஏற்படும். அதாவது கடைசி எக்காளம் தொனிப்பதற்கு ஒரு காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இறுதி எக்காளம்

யோசுவா எரிகோவை கைப்பற்றுவதற்காக ஏழு நாள் முற்றிகைப்போட்டு, ஒவ்வொரு நாளும் படைகளுக்கு முன், ஏழு ஆசாரியர்கள் ஏழு எக்காளங்களோடு அந்த பட்டணத்தைச் சுற்றிவந்து, கடைசி நாளில் ஏழுமுறை சுற்றிவந்த காரியத்தை பவுல் தன்னுடைய வசனத்தில் குறிப்பிடுகிறார். முதல் நாளிலே உடன்படிக்கைப் பெட்டியை சுமந்த ஆசாரியர்களோடு யோசுவா அதிகாலையில் எழுந்து சென்ற காரியம், நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, சுவிசேஷ யுக சபை துவக்கத்தில், பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது.

யோசுவா 6:15,16,20 வசனங்களில் உள்ள வரிசையான சம்பவங்களைக் கவனித்துப் பாருங்கள்.

1. கடைசி நாளில் "அதிகாலையில் எழுந்து" அந்த பட்டணத்தை ஏழு முறை சுற்றிவந்தார்கள்.
2. எக்காளங்கள் மிக வேகமாக ஊதப்பட்டது.
3. யோசுவா ஜனங்களை நோக்கி - "ஆர்ப்பரியுங்கள்" என்றார்.
4. அவர்கள் அனைவரும் மகா சத்தமாக ஆர்ப்பரித்தார்கள். அதன் விளைவாக அலங்கங்கள் இடிந்துவிழுந்தது. யோசுவா பட்டணத்தைப் பிடித்தார்.

சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாளில்" பாபிலோன் விழுவதை இந்த சம்பவம் அடையாளப்படுத்துகிறது. இப்படியாக, யோசுவா எரிகோவை முற்றிகைப்போட்ட அந்த ஏழு நாட்கள் - முழு சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது. (மேலும் இந்த காலப்பகுதி கிறிஸ்துவின் ஆயிரவருட இராஜ்யத்தின் துவக்கத்தில் முடிவடையும்)

ஏழு எக்காளங்களை ஊதக்கூடிய ஏழு ஆசாரியர்கள், வெளிப்படுத்தல் 8 முதல் 11 அதிகாரங்களில் எக்காளங்களைப் பிடித்திருக்கும் ஏழு தூதர்களைக் காட்டுகிறது. ஏழாம் நாளில் எரிகோ பட்டணத்தைச் சுற்றின ஏழு சுற்றுகளும், வெளிப்படுத்தல் 16ம் அதிகாரத்தில் பிரிக்கப்பட்ட ஏழு வாதைகளையும் "கடைசி நாள்" எடுத்துக்காட்டுகிறது.

எரிகோவில் நடந்த சம்பவத்தை பவுல் 1தெசலோனிக்கேயர் 4:16ம் வசனத்தில் தலைக்கீழாக வரிசை படுத்திக் காட்டுகிறார். "கர்த்தர் தாமே, 4. ஆரவாரத்தோடும், 3. பிரதான தூதனுடைய

சத்தத்தோடும் 2. தேவ எக்காளத்தோடும் இறங்குவார் 1. அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் **முதலாவது** எழுந்திருப்பார்கள். பவுல் மீண்டும் தன்னுடைய பாடத்தில், விசுவாசிகளின் உயிர்த்தெழுதலை "அதிகாலையில் எழுந்து" என்ற காரியத்திற்கு இசைவாக இருப்பதைக் காட்டுகிறார். இப்படியாக, முதல் ஆறு நாட்களும் சுவிசேஷ யுகத்தின் பல நூற்றாண்டுகளையும் ஏழாம் நாள் "கடைசி நாள்" அதாவது கடைசி பத்து அல்லது இருபது வருடங்களைக் குறிக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆனால் "கடைசி நாட்கள்" என்ற காரியம், சுவிசேஷ யுகத்தின் பல மடங்கான காலங்களையும், "கடைசி நாள்" என்ற காரியம் முதலாம் உயிர்த்தெழுதலோடும், நியாயத்தீர்ப்போடும் (யோவான் 12:48) சம்பந்தப்பட்டிருக்கிறது. (யோவான் 6:39, 40, 44,54, 11:24) "கடைசி நாள்", "கடைசி எக்காளம்" மற்றும் சுவிசேஷ யுகத்தின் "அறுவடை" மற்றும் "ஏழுாவது வாதை" இவ்வனைத்துமே, பூமியின்மேல் சபையின் கடைசி அல்லது முடிவான காலப்பகுதியைக் குறிக்கிறது. இந்த காலப்பகுதியில் ஒவ்வொரு விசுவாசமுள்ள பரிசுத்தவானும் தன்னுடைய பூமிக்குரிய பயிற்சியை மரணத்தில் முடிப்பார்கள். அப்போது ஒரு "இமைப்பொழுதில், கண் இமைக்கும்நேரத்தில், கடைசி எக்காளம் தொனிக்கும்போது, அதவாது கடைசி ஏழு வாதைகளின்போது, இவர்கள் மறுரூபம் அடைவார்கள்."

இந்த மாம்சத்திற்குரிய சரீரத்தை இழப்பதற்கு ஒவ்வொரு பரிசுத்தவானும் மரித்து, பரலோகத்திற்குரிய சரீரமாகிய, ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்த்தெழவேண்டும். (1கொரிந்தியர் 15:40 -40) ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றின ஒவ்வொரு பரிசுத்தவான்களும், திவ்விய சுவாபத்தை அப்பொழுது பெறுவார்கள். ஆயினும், அவர்கள் மரிப்பதன் அடிப்படையில், அவர்களுக்குள் இரண்டு வித்தியாசமான வகுப்பினர்கள் பிரிக்கப்படுகிறார்கள். சுவிசேஷ யுகத்தின் முதல் ஆறு காலங்களில் மரிப்பவர்கள் ஏழாம் காலம் துவங்கும் வரைக்கும் இவர்கள் மரணத்தில் நித்திரையாயிருப்பார்கள். ஆனால் ஏழாம் காலத்தில் அதாவது இறுதி காலத்தில் மரிப்பவர்கள் உடனடியாக ஒரு இமைப்பொழுதிலே, மிகக் குறுகிய காலத்து "நித்திரைக்குப்" பின் உடனடியாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். "பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று." (வெளிப்படுத்தல் 14:13 ) என்றும் வாசிக்கிறோம். இவர்கள் பூமியில் செய்து கொண்டிருக்கும் வேலையைத் தொடர்ந்து பரலோகத்தில் செய்வார்கள் என்று சொல்லப்படுகிறது. அதாவது இவர்களின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் குறிப்பான எந்த நேரத்தைப்பற்றி இங்கு சொல்லப்படவில்லை. அதாவது அவர்கள் மரிக்கக்கூடிய நேரம் மிகமிகக் குறைவானது, மற்றொரு வார்த்தைகயில் சொல்லப்போனால் - "கண் இமைக்கும் நேரம்".

1கொரிந்தியர் 15:52 ம் வசனத்தின் மீதி பகுதியை இவ்விதமாக நாம் புரிந்துகொள்ள வேண்டும் - "எக்காளம் தொனிக்கும், (கடைசி நாளின் துவக்கத்திலிருந்து சபை முடிவடையும் வரைக்கும்) அப்பொழுது மரித்தோர் (சுவிசேஷ யுக துவக்கத்தில் மரித்தவர்கள்) அழிவில்லாதவர்களாய் (தங்களுடைய ஆண்டவரைப்போல மனுக்குலத்திற்கு புலப்படாதவர்களாக) எழுந்திருப்பார்கள்; (அச்சமயத்திலிருந்து) நாமும் (கடைசி நாளில் மாம்சத்திலிருக்கும் சபை ஒவ்வொருவராக)


மறுரூபமாக்கப்படுவோம் (மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்தில் மாற்றப்படுவோம்)

## இந்த இரகசியம் என்ன?

அயலாருக்கு அல்ல துவக்கத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே ஒரு இரகசியம் தெரிந்திருந்தது. புதிய ஏற்பாட்டில் அநேக இரகசியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது - தேவனுடைய இராஜ்யத்தில், புறஜாதிகளும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாவதும், கிறிஸ்துவின் சரீரம் முழுமைப்பெற்றபின் இஸ்ரயேல் கூட்டிச்சேர்க்கப்படுவதும் போன்ற அநேக இரகசியங்கள் சொல்லப்படுகிறது. (மாற்கு 4:11, ரோமர் 11:25, எபேசியர் 3:3-6) ஆயினும், 1கொரிந்தியர் 15:40-50ம் வசனங்கள் விவரிப்பதுபோல, இயல்பான மனித நிலையிலிருந்து ஆவிக்குரிய தெய்வீக நிலைக்கு மாறுவதை இரகசியமாகச் சொல்லாமல், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், அவருடைய வந்திருத்தலில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்றும், அவருடைய வருகைக்குப்பின் மாம்சத்திலிருப்பவர்கள் பூரணமடைந்து மரிக்கும்போது, ஒவ்வொருவராக உயிர்த்தெழுவார்கள் என்பதை, இரகசியமாகச் சொல்லப்படுகிறது

அப்பமும் ரசமும்

# மெல்கிசேதேக்கு



அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து - ஆதியாகமம் 14:18

கடைசி இராப்போஜனத்தில் தன்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துவதற்கு இயேசு பயன்படுத்தின அதே இரண்டு அடையாளங்கள் மேற்கூறப்பட்ட வசனப்பகுதியிலும், குறிப்பிடுகிறது. நமக்கு செலுத்தப்பட்ட ஈடுபலிக்காகக் கொடுக்கப்பட்ட முழுமையான ஜீவனை இந்த அடையாளங்கள் சுட்டிக்காட்டுகிறது. " நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். "(யோவான் 6 :51)" இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத்தேயு 26:28)

எபிரெயரின் புத்தகத்தில் மெல்கிசேதேக்கின் வரைபடத்தை இயேசு முழுமையாக நிறைவேற்றுகிறார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக விவரிக்கிறார். ஆபிரகாமை பின்தொடர்ந்த மனுஷருக்கு மெல்கிசேதேக்கு அப்பமும் ரசத்தையும் கொடுத்ததுப்போல, நம்முடைய ஆண்டவராம் இயேசு ஆபிரகாமின் சந்ததிக்கு, நிழலான அப்பத்தையும் ரசத்தையும் கொடுத்தார்.

மெல்கிசேதேக்கைப் பற்றி ஏழு வசனங்கள் மட்டுமே ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதியாகமம் 14:18-24) இந்த சுருக்கமான வரலாறு, இயேசுவின் மாதிரியைச் சுட்டிக்காட்டுவதைப் பற்றி 110ம் சங்கீதம் குறிப்பிடுகிறது. பழைய ஏற்பாட்டில் இரண்டவது முறையாக மெல்கிசேதேக்கின் பெயர் காணப்படுகிறது. 110ம் சங்கீதம் ஆயிரவருட ஆட்சிக்குரிய சங்கீதமாக இருக்கிறது. "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார். " என்று நான்காம் வசனம் கூறுகிறது. ஆகவே தெய்வீக நிலையில் உள்ள நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு மெல்கிசேதேக்கு நிழலாக இருக்கிறார் என்ற காரியத்தை பவுல் விவரிப்பதற்கு இது போதுமான செய்தியாக இருந்தது.

110ம் சங்கீதம் - "தாவீதின் சங்கீதம்" என்ற தலைப்பைக் கொண்டிருக்கிறது. இந்த சங்கீதம் தாவீதைப் பற்றியது என்ற பொருளையும் கொடுக்கலாம். ஏனெனில், இந்த சங்கீதம் அநேக வழிகளில் தாவீதுக்கும் பொருந்துகிறது. ஆனால் தாவீது இயேசுவுக்கு நிழலாயிருக்கிறபடியால் பொதுவாக, இந்த சங்கீதத்தின் ஆழமான காரியங்கள் நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு பொருந்தும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

"மெல்கிசேதேக்கின் முறைமையைப்" பற்றி நான்காம் வசனம் குறிப்பிடுகிறது. ஆனால் ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு, ஆசாரியர்களின் முழுமையான முறைமைகளைக் கொண்டிருந்தார் என்பது பொருள் அல்ல. சங்கீதம் 110 :4ம் வசனத்தில் "முறைமை" என்று குறிப்பிடப்படும் வார்த்தை, அவர் செயல்பட்ட ஒரு விதத்தை அல்லது அவருடைய போக்கை எடுத்துக்காட்டுகிறது. (ஸ்டிராங்க்ஸ - 1700)

எபிரெயர் 5:6ம் வசனத்தில் பவுல் இதே காரியத்தைக் கூறும்பொழுது "மெல்கிசேதேக்கின் முறைமை" என்ற வாக்கியத்தில் உள்ள "முறைமை" என்ற வார்த்தை "டாக்சிஸ்" என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இதற்கு "முறையான ஏற்பாடு...பதவி. .. அல்லது குணம்..... அல்லது மேன்மையான பொறுப்பு....." என்ற பொருள் தருகிறது. ஆனால் இது எண்ணிக்கைகளை ஒருபோதும் குறிப்பதில்லை. "மெல்கிசேதேக்கின் பதவியின்படி" என்று ரோதர் ஹாம் மொழிபெயர்ப்பு கூறுகிறது. "மெல்கிசேதேக்கின் விதத்தின்படி" என்று நியு வர்ல்டு மொழிபெயர்ப்பு கூறுகிறது. மொத்தத்தில் இரண்டு மொழிபெயர்ப்புகளும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கிறது. மெல்கிசேதேக்கு ஒரு தனிநபராக இருந்தார். இந்த பாத்திரத்தை முழுமையாக நம்முடைய ஆண்டவராம் இயேசு தனித்து நிறைவேற்றினார். {தாவீதின் சிங்காசனத்தை ஒரு தனி இராஜாவாக இயேசு சுதந்தரித்தார். தாவீதின் வம்சத்திலிருந்து வரிசையாக வந்த கடைசி யூதா இராஜாவாகிய சிதேக்கியாவின் காலத்தில், தேசம் பாழாக்கப்பட்டப்போது சிங்காசனம் கவிழ்க்கப்பட்டது. "உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." (எசேக்கியேல் 21:27) இயேசு மட்டுமே அந்த சிங்காசனத்திற்குத் தகுதிபெற்றவராக இருந்தார். எனவே இந்த வசனம் ஒருமையில் சொல்லப்பட்டிருக்க, தாராளமனதோடு, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அந்த சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சிபுரிய அவர் அனுமதிப்பார் என்ற உண்மைக்கு முரண்பட்டது அல்ல (வெளிப்படுத்தல் 3:21) அதேபோல் இயேசுவும் மெல்கிசேதேக்கு என்ற தனிநபரின் குணங்களை நிறைவேற்றுகிறார். ஆனாலும் ஆயிரவருட ஆட்சியில் பரிசுத்தவான்கள் இயேசுவோடு கூட ஆசாரியர்களாய் இருந்து பணிபுரிவார்கள். (வெளிப்படுத்தல் 20:6)}

### உடனடியான பிரயோகம்

இராஜாவாகிய தாவீதை மனதில் கொண்டு - 110ம் சங்கீதம் எழுதப்பட்டது. அந்த சங்கீதம் மிக நேர்த்தியாக

அவருக்குப் பொருந்துகிறது. தேவன் இஸ்ரயேலின் எல்லைகளை விஸ்தரிப்பதற்கும், அதை ஆளுவதற்கும் தாவீதை தெரிந்துகொண்டார். " கர்த்தாவே என் (தாவீது) சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்...." (சங்கீதம் 110:1)

அபிஷேகிக்கப்பட்ட தாவீது சீயோனில் ஆட்சி புரிந்ததைப்பற்றி 2ம் வசனம் விவரிக்கிறது. "அவர் சத்துருக்களின் மத்தியில் ஆளுகை செய்து" - அவர்களை ஜெயித்தார். அதாவது அநேக இராஜாக்களை மேற்கொண்டு தன்னுடைய ஆளுகையை விஸ்தரித்தார்.

"உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்." (வசனம் 3) என்ற வசனத்தின் பொருளை, NIV மற்றும் KJV ஆகிய இரண்டு மொழிப்பெயர்ப்பிலும் புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், KJV யைப் பார்க்கிலும் NIV -ல் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், வாலிபமான, இஸ்ரயேலின் வீரர்கள், சுதந்தரமாக இராஜாவினிடத்தில் மந்தையை நடத்துவார்கள் என்று பொருள்படுகிறது.

4ம் வசனம், தாவீதை ஒரு ஆசாரியனாகக் குறிப்பிடுகிறது. "ஆசாரியன்" என்ற வார்த்தை "கோஹென்" என்ற எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும் இந்த வார்த்தை பெதுவாக "ஆசாரியன்" என்று பழைய மொழிபெயர்ப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஆசாரியன் என்ற ஆங்கில வார்த்தை (priest) எபிரெய வார்த்தையைவிட இன்னும் விரிவான பொருளைத் தருகிறது. மிக முக்கிய பொறுப்பில் உள்ளவர் என்று சொல்லர்த்தமான பொருள் தருகிறது. மேலும், "பிரதானிகள், பிரபு, தலைமை பொறுப்பாளர்" போன்ற அர்த்தங்களையும் இந்த வார்த்தை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. ஆகவே தாவீது லேவியர்களின் வழிவந்த ஆசாரியனாய் இராவிட்டாலும் மற்ற அர்த்தங்கள் அவருக்கு பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. (எடுத்துகாட்டாக - "தாவீதின் குமாரர்கள் பிரதானிகள் என்று 11சாமுயேல் 8:18ம் வசனம் கூறுகிறது. இங்கு பிரதானிகள் என்ற வார்த்தைக்கு "கோஹென்" என்ற எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.)

தாவீது " மெல்கிசேதேக்கைப் போல ஒரு பிரதானியாய் இருப்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. மேலும் பலவழிகளில் இந்த விபரங்கள் தாவீதிற்கு பொருந்துகிறது. மெல்கிசேதேக்கு பழங்காலத்தில் சாலேமின் இராஜாவாக இருந்தார். காலப்போக்கில் இந்த இடம் "எரு - சாலோம்" என்று அழைக்கப்பட்டது. {எருசலேம் என்பதற்கு சமாதானத்தின் அஸ்திபாரம் என்று ஸ்டாரங்ஸ் கன்கார்டன்ஸ் கூறுகிறது.) இந்த வார்த்தை யாராஹ மற்றும் ஷாலாம் என்ற வார்த்தைகளிலிருந்து வந்தது. யாராஹ என்பதற்கு "சரியாக, நீரோட்டத்தைப்போல்........ போடுவது, எறிவது....." என்று பொருள். காலப்போக்கில் இந்த பகுதி எருசலேமைக் கட்டுவதற்கு அல்லது அதன் அஸ்திபாரத்தைப் போடுவதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இந்த பட்டணத்தை முழுமையாக கட்டின ஒருவர் இந்த பெயரை கூட்டியிருக்கவேண்டும். அடுத்து ஷாலாம் என்பதற்கு "பாதுகாப்பு....... முழுமை, ஸ்நேகமாக இருப்பது " என்று பொருள்படுகிறது. இந்த வார்ததைகளிலிருந்து "சமாதானம்" என்ற வார்த்தையை ஷாலோம் என்று சேர்க்கப்பட்டது - யாராஹ - ஷாலாம் } மெல்கிசேதேக்கு ஒரு அரசியல் ஆளுனராகவும், ஒரு மதத்தலைவராகவும் இருந்தார். அதேபோல தாவீதும் அரசியல் ஆளுனராக இருந்தார். மேலும் அவர் பிறப்பினால் ஆசாரியனாக இராத போதிலும் தேவனாகிய யேகோவாவிற்கு விசுவாசமுள்ள கீழ்ப்படிதலான ஒரு ஊழியக்காரனாய் அவரை சேவித்து ஜனங்களையும் அதே பக்தி மார்க்கத்தில் வழிநடத்தி தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை ஒரு மகிமையான இடத்தில் வைப்பதற்கு வழிதேடினார்.

மெல்கிசேதேக்கு என்ற பெயர் தாவீதின் காலத்திற்கும் பொருந்துகிறது. மெல்கி என்ற எபிரெய வார்த்தை "இராஜா" என்று பொருள். இப்படியாக தாவீது இஸ்ரயேலுக்கு இராஜாவாக இருந்தார். தாவீதின் காலத்தில் சாதோக்கு விசுவாசமுள்ள லேவிய ஆசரியராய் இருந்தார். (சாதோக் என்பதற்கு நீதியுள்ள என்று பொருள்) தாவீதின் சகல மதத்திற்குரிய காரியங்களும், அவர் வழியாக செயல்படுத்தப்பட்டது. (11சாமுயேல் 8:17, 15:24) ஆகவே மெல்கி மற்றும் சாதோக் என்ற வார்த்தைகள் இணைக்கப்பட்டு மெல்கிசேதேக் என்ற வார்த்தைகள் நமக்கு தருகிறது. இதனால் மெல்கிசேதேக் என்ற வார்த்தை தாவீதின் காலத்திற்கும் பொருந்துவதை நாம் காணலாம். மெல்கிசேதேக்கின் மரணம் பதிவு செய்யப்படாததின் காரணத்தினால் அவர் முடிவில்லா ஆசாரியன் என்று சொல்லப்படுகிறார். அதேபோல தாவீது நிரந்தரமான ஒரு இராஜாவாயிருந்தார். அதாவது தாவீதின் சந்ததிக்கு, சிங்காசனத்தின் உரிமை நித்தியமாக கொடுக்கப்படும் என்று பிதாவாகிய தேவன் வாக்களித்திருந்தார். ஆகவே எருசலேமில் தாவீதின் சந்ததி 18 தலைமுறைகள் தொடர்ந்து ஆட்சி செய்தது. பிரிந்து போன பத்து கோத்திரங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தாவீதின் பேரனாகிய ரெகொபெயாமின் நாட்களில் பத்து கோத்திரத்தை ஆண்டு வந்த யெரொபெயாமுக்குப்பின், ஒவ்வொரு மூன்று, நான்கு தலைமுறைகளிலும் வம்சங்கள் மாறியதை நாம் காணலாம். இறுதியில் இராஜாவாகிய தாவீதின் ஆளுகைக்குரிய உரிமையைப் பெற்ற அவருடைய குமாரனாகிய இயேசுவினிடம் இந்த பொறுப்பு நித்தியமாக கொடுக்கப்பட்டது.

தாவீது தேவனுடைய வலது பக்கத்தில் அமர்ந்து இராஜாக்களை வெட்டுவதாக, 5ம் வசனம் குறிப்பிடுகிறது. இந்த சம்பவங்கள் நடைபெறும் வரிசையைப்பற்றி 6ம் வசனம் பேசுகிறது. எதிர்க்கக்கூடிய இராஜாக்களையும், அவர்களின் படைகளையும் ஜெயிப்பதற்கு, தேவன் தம்முடைய வல்லமையினால் அவரை பராமரித்து,

போஷித்து "அவருடைய தலையை உயர்த்துவார்" என்று 7ம் வசனம் விவரிக்கிறது. முழுமையான சலுகைகளும் இராஜாவாகிய தாவீதிற்குக் கொடுக்கப்பட்டது.

## முழுமையான பிரயோகம்

ஆயினும், கிறிஸ்தவர்கள் உணர்வது போல, இந்த சங்கீதம் தாவீதின் குமாரனாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு மிக ஆழமாகப் பொருந்துகிறது. மேலும் இதன் பிரயோகத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர்களின் புத்தகத்தில் எடுத்துரைக்கிறார்.

நியாயபிரமாணத்தின் உடன்படிக்கையின் காரியங்களுக்குப் பதிலாக இயேசு ஒரு மேலான பணிக்காக அனுப்பப்பட்டார் என்பதை பவுல் எபிரெயரில் குறிப்பிடுகிறார். மீட்புக்குரிய ஏற்பாடுகளையும் அதின் விளைவாக வரும் ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கு கிறிஸ்தவர்கள் மற்றும் யூத கிறிஸ்தவர்களும் பழைய நியாயப்பிரமாணத்தின் காரியங்களையும் நோக்காமல் கிறிஸ்துவையும், அவருடைய மேலான பணியையும் கண்நோக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இஸ்ரயேலுக்கு தூதர்களின் வழியாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதினால் இயேசு தூதர்களைக் காட்டிலும் மேலானவர் என்று அப்போஸ்தனாகிய பவுல் எபிரெயருக்கு எழுதின முதல் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். இயேசு தூதர்களைக் காட்டிலும் மேலானவர் என்று எடுத்துக் காட்டி, நியாயபிரமாணத்தின் கோட்பாடுகளைக் காட்டிலும் இயேசுவின் பணி மிக உயர்ந்தது என்று பவுல் வலியுறுத்துகிறார். (எபிரெயர் 2:2, கலாத்தியர் 3:19) இயேசு நிறைவேற்றிய ஆசாரியத்துவத்தின் பாடத்தை எபிரெயர் 5ம் அதிகாரத்தில் பவுல் அறிமுகப்படுத்துகிறார். இயேசு உயர்த்தப்பட்ட நிலையில், ஆரோனைப் போல அல்ல, மெல்கிசேதேக்கைப் போல பிரதான ஆசாரியனின் பணியை அவர் செய்தார் என்பதை விவரிக்கிறார். இந்த சம்பாஷணையை 7ம் அதிகாரத்திலும் தொடர்ந்து காணலாம் இங்கு மெல்கிசேதேக்கு லேவியைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று விளக்குகிறார். இப்படியாக இயேசுவின் ஆசாரியத்துவம் (மெல்கிசெதேக்கு) லேவியரின் ஆசரியத்துவத்தைக் (ஆரோனின் கோத்திரம்) காட்டிலும் மேலானது.

பவுல் ஒரு மைய குறிப்பை இங்கு விவரிக்கிறார். நம்முடைய தேவைகளுக்கு பணியாற்றப்படும் ஆசாரியத்துவம், லேவியின் முறையிலிருந்து மெல்கிசேதேக்கு முறைமைக்கு மாற்றப்படுவது அவசியமானதால் முழு நியாயப்பிரமாண சட்டத்தை மையமாய் கொண்டிருக்கும் லேவியர்களின் ஆசாரியத்துவம் இந்த கிருபையின் காலத்தில் ஆசீர்வாதங்களைக் கொடுக்கக்கூடிய வழியாகப் பயன்படுத்தப்படுவதில்லை". நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்." (எபிரெயர் 7:12)

## இயேசு மெல்கிசேதேக்கைப் போல இருப்பது எப்படி?

லேவியரின் ஆசாரியத்துவத்தைக் கொண்ட ஆரோன் மற்றும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தைக் கொண்ட இயேசு - இருவரும் ஒரு காரியத்தில் ஒருமித்து இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தேவனால் அழைக்கப்பட்டவர்கள் (எபிரெயர் 5:4,5) இயேசுவின் அழைப்பை எடுத்துக் காட்டுவதற்கு சங்கீதம் 110:4ம் வசனத்தை பவுல் குறிப்பிடுகிறார். "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்...." ( எபிரெயர் 5:6, 7 :17)

இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பணியாற்ற துவங்கின காலத்தை சங்கீதம் 2:7ல் குறிப்பிடப்பட்ட காலத்தோடு பவுல் ஒப்பிட்டுப் பேசுகிறார். " அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராயிருக்கிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்." (எபிரெயர் 5:5) இதை அப்போஸ்தலர் 13:33ம் வசனத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலோடு இணைத்துப் பேசுகிறார். மற்றொரு வார்த்தைகளில் சொல்லப் போனால் இயேசு உயிர்த்தெழுந்து, அழியாநிலையைப் பெற்று நித்தியமான வாழ்க்கைக்குள் அவர் பிரவேசித்தப்போது இயேசு மெல்கிசேதேக்கின் பணியைத் துவங்கினார்.

எபிரெயர் 6ம் அதிகாரத்தில் மெல்கிசேதேக்கைப்பற்றி பேசி முடித்தப்பின் பவுல் அந்த அதிகாரத்தின் கடைசி வசனத்தில் மீண்டும் பாடத்தைத் தொடருகிறார். " அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்." (எபிரெயர் 6:19, 20) என்று இயேசு பரலோகத்திற்கு ஏறினதைப்பற்றிக் கூறுகிறார்.

மெல்கிசேதேக்கு கொண்டிருந்த இரண்டு பொறுப்புகளையும் அவருடைய நாமத்தையும் தீர்க்கதரிசனமாக இயேசுவைக் குறிப்பிடுகிறது என்று எபிரெயர் 7:1,2 வசனங்களில் பவுல் காட்டுகிறார். பொறுப்பில் அவர் சாலோமின் இராஜாவாகவும் (சமாதானத்தின் இராஜா) பெயரில் மெல்கிசேதேக்கு (நீதியின் இராஜாவாகவும்) என்ற இரண்டு உத்யோகங்களும் இயேசுவுக்கு மிகத் தெளிவாகப் பொருந்தியது.

மெல்கிசேதேக்கின் பெற்றோரைக் குறித்து பதிவுகள் இல்லாதபடியினால் "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்." (எபிரெயர் 7:3)என்று கூறப்படுகிறது.

மேலும், மெல்கிசெதேக்கின் முடிவைக் குறித்தும் பதிவும் காணப்படவில்லை என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் ஆரோனின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வித்தியாசமான நிழலானது - மெல்கிசேதேக்கின் முறையின் ஆசாரியன் முடிவில்லா நாட்களாக தொடர்ந்து பணிபுரிவார் என்று குறிப்பிடுகிறது. இது அழியா ஜீவனைப் பெற்ற இயேசுவுக்கு மிகச் சரியாக பொருந்தக்கூடியதாக இருக்கிறது." இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்." (எபிரெயர் 7:3)

அடுத்து, ஆபிரகாமிலிருந்த வந்த சந்ததியான லேவி, ஆபிரகாம் மூலம் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினதினால், மெல்கிசேதேக்கு லேவியைக் காட்டிலும் பெரியவர் என்று பவுல் கூறுகிறார். (எபிரெயர் 7:4-10)

இந்த பாடத்தைப்பற்றிய விபரங்கள் இருந்தபோதிலும் - " அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்; அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறோரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?" (எபிரெயர் 7:11) என்ற கேள்வியோடு பவுல் மௌனமாகிறார். ஒரு குறிப்பு தெளிவாகிறது. பரிபூரணம், முழுமை, மற்றும் நிறைவு இவ்வனைத்தையும் - அதிகமான மகிமையைப் பெற்ற மெல்கிசெதேக்கின் ஆசாரியத்துவத்தின் கீழ் பெறுகிறோம். அதே நேரத்தில் சட்டத்திலிருந்தும் விடுதலைப் பெறுகிறோம்.

மேற்கூறப்பட்ட விபரங்களில் 11ம் வசனத்தின் "இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்;" என்ற பகுதி விடப்பட்டதாகத் தெரிகிறது. இந்த பகுதி அதன் பொருளை குறிப்பிடப்பட்டாலும், பவுல் இந்த காரியத்தை எபிரெயர் 8:6ம் வசனத்தில் தொடர்ச்சியாக விவரிப்பதைக் காணலாம்.

" அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்" (எபிரெயர் 7:11) "இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்." (எபிரெயர் 8:6) இந்த இரண்டு வசனங்களிலும் ஏதோ ஒரு காரியம் "ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது". ஆரோனின் ஆசாரியத்துவத்தின் நியாயப்பிரமாணத்தின் பணி மற்றும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தின் இரக்கத்தின் பணியைப் பற்றியும் இங்கு குறிப்பிடுகிறது.

"ஸ்தாபிக்கப்பட்டது" என்ற வார்த்தை "நினோமோதிடிடாய்" என்ற கிரேக்கப் பதத்தின் மொழியாக்கமாகும். (ஸ்டிராங்க்ஸ் 3549) வசனங்களில் இருமுறை மட்டுமே இந்த வார்த்தை தென்படுகிறது. சட்டப்பூர்வமான அனுமதி, சட்டம் இயற்றுதல், அங்கீகாரம் என்று பொருள் தருகிறது. இப்படியாக நியாயப்பிரமாணத்தின் காலத்திற்கும், கிருபையின் காலத்திற்கும் உள்ள தெளிவான வித்தியாசத்தை நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம். இந்த வித்தியாசங்கள் இரண்டுவேறுபட்ட பொறுப்புகளில் உள்ள ஆசாரியர்களைக் கொண்டு, நமக்கு தெளிவாகப் பிரித்துக் காட்டப்படுகிறது.

எபிரெயர் 7 :20,21 ல் மற்றொரு வித்தியாசமும் குறிப்பிடப்படுகிறது. பிரமாணத்தின் அடிப்படையில் ஆரோனின் ஆசாரியத்துவம் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் சங்கீதம் 110:4ம் வசனத்தில் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் ஒரு பிரமாணத்தோடு அறிமுகப்படுத்தப்படுகிறது. இதிலும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் மேன்மையான நிலையில் காணப்படுகிறது.

23 மற்றும் 24ம் வசனத்தில் மற்றொரு வேறுபாட்டையும் காணலாம். ஆசாரிய பொறுப்பில் இருந்த தனி நபர்களின் மரணத்தின் காரணமாக ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு மனிதர்களால், ஆரோனின் ஆசாரியத்துவம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இயேசு இனி ஒருபோதும் மரிப்பதில்லை என்பதால் மெல்கிசெதேக்கின் ஆசாரியத்துவம் மாறாததாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வசனம் 26 : நமக்காக பரிந்து பேசுகிற பிரதான ஆசாரியர் "பாவம் இல்லாதவரும், பரிசுத்தமானவரும், மாசற்றவரும், பாவத்திற்கு விலகினவரும் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலானவர்" என்று பவுல் குறிப்பிடுகிறார். பழைய ஏற்பாட்டின் அபூர்ணமான, பாவமுள்ள ஆசாரியர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய ஆண்டவர் மேலான உயர்ந்தநிலையில் உள்ளவர் என்று தெளிவாகிறது.

வசனம் 27: ஆரோன் வழியாக வந்த ஆசாரியர்கள் தேவைப்பட்ட பலியை மீண்டும் மீண்டுமாக செலுத்தினார்கள். ஏனெனில், இந்த பலிகள் உண்மையில் பாவத்தைப் போக்கவில்லை. ஆனால், நம்முடைய பிரதான ஆசாரியன் பாவிகளுக்கான பலியை, ஒரே முறை செலுத்தி, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை நித்தியமாக மீட்டுக்கொண்டார்.

வசனம் 28: ஆரோனின் வழிவந்த ஆசாரியர்கள் குறைவுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் நம்முடைய பிரதான ஆசரியர் எல்லாவற்றிக்கும் மேலாக நித்திய பூரணத்தைப் பெற்றவராக இருக்கிறார்.

## யோசேப்பு, பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி

ஆபிரகாமின் மனுஷரை திடப்படுத்துவதற்காக மெல்கிசேதேக்கு கொடுத்த அப்பமும், ரசத்தையும் பற்றி

யோசேப்பின் சரித்திரத்தில் மீண்டும் காணலாம். மெல்கிசேதேக்கைப்போல யோசேப்பும் நம்முடைய இரட்சகரை அடையாளப்படுத்துகிறார். இயேசு நம்மை மீட்க மரித்தார். நம்முடைய இரட்சிப்புக்காக தன்னுடைய ஜீவனை - அதாவது, மாம்சத்தையும், இரத்தத்தையும் - தியாக பலியாக ஒப்புகொடுத்தார். இயேசுவின் மரண நிலையை, யோசேப்பு சிறையிலிருந்தது,, துல்லியமாக அடையாளப்படுத்துகிறது.

செய்யாத குற்றத்தை யோசேப்பின் மேல் சுமத்தி சிறைக்கு அனுப்பினது போல, இயேசுவும் செய்யாத குற்றத்திற்காக நியாயந்தீர்க்கப்பட்டார். சிறையிலிருந்த யோசேப்பை, பார்வோனின் இரண்டு வேலைக்காரர்கள் (பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி) சந்தித்தார்கள். இந்த இரண்டு பேரும் ஒரே விதமான சொப்பனம் கண்டார்கள். இதன் விளக்கத்தை யோசேப்பிடம் கேட்டார்கள்.

பானபாத்திரக்காரன் கண்ட சொப்பனத்தில், மூன்று கொடிகளைக் கொண்ட ஒரு திராட்சசெடியைக் கண்டான். அதில் பழுத்திருந்த பழங்களை ஒரு பாத்திரத்தில் பிழிந்து, இராஜாவுக்குக் கொடுத்தான். அந்த மூன்று கொடிகளும் மூன்று நாட்கள் என்றும், அந்த மூன்றாம் நாளில் அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு, மீண்டும் இராஜாவினிடத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவார் என்றும் யோசேப்பு விளக்கமளித்தார். சொன்னபடியே நடந்தது. அதேபோல, இயேசுவும் பிதாவினுடைய வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டு, "மனுஷரையும் தேவர்களையும் சந்தோஷிப்பிக்கும்" இரட்சிப்பின் திராட்சரசத்தைக் கொடுப்பார். (நியாயாதிபதிகள் 9:15)

சுயம்பாகியின் சொப்பனத்தில் மூன்று கூடைகள் நிறைய அப்பங்கள் காணப்பட்டது. அந்த அப்பங்களை ஆகாயத்து பறவைகள் கொத்திச் சென்றது. இந்த மூன்று கூடைகளும் மூன்று நாட்கள் என்றும் அந்த மூன்று நட்களுக்குப்பின் அந்த சுயம்பாகி தூக்கில் போடப்படுவான் என்றும் அவனுடைய மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகள் கொத்தித்தின்னும் என்றும் யோசேப்பு விளக்கம் அளித்தார். அதேபோல மூன்றாம் நாளில் இயேசு மாம்சத்தோடு உயிர்த்தெழவில்லை. "இந்த உலகத்தின் ஜீவனுக்காக " சுயம்பாகியின் அப்பத்தை பறவைகள் எடுத்துச் சென்றது போல, இயேசுவின் மாம்சம் "இந்த உலகத்தின் ஜீவனுக்காக " நித்தியமாக கொடுக்கப்பட்டுவிட்டது.

நம்முடைய மீட்புக்காக முழுமையாக கொடுக்கப்பட்ட இயேசுவின் மனித ஜீவனை (மாம்சம், இரத்தம்) இந்த இரண்டு அடையாளங்களும் குறிப்பிடுகிறது. அந்த இரட்சிப்பின் வழியாக வரக்கூடிய மகிழ்ச்சியான ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்கு இயேசு உயர்த்தப்படுவார் என்ற ஒரு காரியத்தையும், அவருடைய மாம்சம், நம்முடைய இரட்சிப்புக்காக நித்தியமாக பலி செலுத்தப்பட்டது என்ற மற்றொரு காரியத்தையும் இந்த சொப்பனங்கள் எடுத்து காட்டுகிறது.

**அப்பங்களும், வற்றலான திராட்சபழக்குலைகளும்**

சில மாற்றங்களோடு இதே அடையாளங்கள் தாவீது இராஜாவின் காலத்திலும் காணப்படுகிறது. தாவீதின் மனுஷர்கள் ஓடினதால் களைத்து விடாய்த்திருந்தார்கள். அப்பொழுது சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்தின் வேலைக்காரனாகிய சீபா "பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டுவந்து, அவனைச் சந்தித்தான்; அவைகளில் இருநூறு அப்பங்களும், வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகளும், வசந்தகாலத்துப் பலனான நூறு குலைகளும், ஒரு துருத்தி திராட்சரசமும்..." (IIசாமுயேல் 16:1)தாவீதின் மனுஷருக்கு கொடுத்தான். பொதுவாக சவுலின் நாற்பது வருடங்கள் யூத யுகத்தையும், தாவீதின் நாற்பது வருடங்கள் சுவிசேஷ யுகத்தையும், சாலொமோனின் நாற்பது வருடங்கள் ஆயிரவருட ஆட்சியையும் அடையாளப்படுத்துவதை நாம் அறிந்திருக்கிறோம். தாவீதின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் புரிந்துகொள்ள, இது ஒரு திறவுகோலான காரியமாகும்.

சவுலின் வழியாக மேவிபோசேத் வந்திருந்தாலும், தாவீதின் இரக்கத்தைப் பெற்றார். அதேபோல யூத ஜனங்களின் மத்தியில் கிறிஸ்துவை தங்களுடைய மேசியாவாக ஏற்றுகொண்ட விசுவாசிகள், இந்த மேவிபோசேத்தை அடையாளப்படுத்துகிறார்கள். யூத சகோதரர்களின் வழியாக மட்டுமே புறஜாதியார் விசுவாசத்தைப் பெற்று சுவிசேஷத்தின் நற்செய்தியினால் திடப்படுத்தப்பட்டார்கள். ஏனெனில், சுவிசேஷம் யூத விசுவாசிகள் மூலமாக வந்தது என்று வாசிக்கிறோம். "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16)

ஒரு வேளை கிறிஸ்துவைப் பற்றிய பாடங்கள் அடங்கியுள்ள வேத வார்த்தையின் இரண்டு பகுதிகளாகிய புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டையும் இந்த "இருநூறு அப்பங்கள்" அடையாளப்படுத்தக்கூடும். "வற்றலான திராட்சைப் பழங்கள்" பிற்காலத்திற்காக பதப்படுத்தப்பட்ட ஆசீர்வாதமான சத்தியங்களை அடையாளப்படுத்தக்கூடும். ஆதி கிறிஸ்தவர்களாக இருந்த யூதர்களின் வழியாக, இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் புறஜாதியின் உலகத்திற்குச் சென்றது.


**இரண்டு முக்கிய அடையாளங்கள்**

இயேசுவின் மனித ஜீவன் - நமக்காக பலிசெலுத்தப்பட்ட காரியம், இறுதி இராபோஜனத்தின்போது கொடுக்கப்பட்ட இரண்டு அடையாளங்களில் விவரமாக எடுத்துக்காட்டப்படுகிறது. நாம் ஜீவனைப் பெறுவதற்கு இவைகளை உட்கொள்ளவேண்டும். இந்த யுகத்தில், நாம் பரலோக ஆசீரைப் பெறுவதற்கு கிறிஸ்துவின் தியாகப் பலியினால் நாம் நீதிமானாக்கப்பட்ட நிலையில், கிறிஸ்துவோடுகூட நம்மையும் ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதற்கு கிறிஸ்துவின் பலி நமக்கு வாய்ப்பளிக்கிறது.

இந்த யுகம் முடிவடைந்தப்பின், நாம் பெற்ற அதே இரட்சிப்பின் மதிப்பை இந்த முழு உலகமும் பெற்றுக்கொண்டு பூரணப்படும். அவர்களும் ஆதாமின் மரணத்தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடைய சாயலுக்கு திரும்பி, நித்திய ஜீவனைப் பெறுவார்கள். அதற்கு முன்னதாகவே, பரலோக அழைப்பு நிறைவு பெற்றிருக்கும். ஆதாம் மற்றும் ஏவாளுக்கு தேவன் ஆதியில் தந்திருந்த பூரணமான மனித நிலையை அனுபவிக்கும் மகிழ்ச்சியான ஒரு வாய்ப்பை பூமியில் உள்ள அனைவரும் பெறுவார்கள். இது பரலோக ஆசீரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சற்று குறைவான ஆசீர்வாதமாகத் தோன்றினாலும், உலக ஜனங்கள் அதில் மிக மகிழ்ச்சியாக களிக்கூறுவார்கள். " அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." (ஏசாயா 25:9)

புதரில் சிக்கிய ஓர் ஆட்டுக்கடா

# ஈசாக்கின் பலி



மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான் - ஆதியாகமம் 22 :4

**Robert Brand**

தேவனுடைய கட்டளையின்படி ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை பலிசெலுத்தின காரியம் கிறிஸ்துவின் பலியை அடையாளப் படுத்துவதை வசனங்களின் மூலம் நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இதை சித்தரிக்கும்படியான விபரங்கள் ஆதியாகமம் 22ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "தேவன் ஆபிரகாமை சோதித்தார்" என்று முதல் வசனம் கூறுகிறது. இது மிகக் கடுமையான சோதனையாக இருந்தது. இருபத்தைந்து வருடங்கள் காத்திருந்தப்பின் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோது தேவன் அவர்களுக்கு ஒரு குழந்தையை வாக்களித்தார். வருங்காலத்திற்குரிய வாக்குத்தத்தங்களையும், கனவுகளையும், எதிர்நோக்குகளையும் அந்த விசேஷித்த குழந்தையின் வழியாக நிறைவேறும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். "பூமியில் உள்ள முழு குடும்பங்கள்" (ஆதியாகமம் 12:3), ஆசீர்வதிக்கப்படுவதற்கு அனைவரும் ஆபிரகாமின் சந்ததியை நம்பியிருந்தார்கள். தேவன் தொடர்ந்து ஆபிரகாமை வழிநடத்தினப்போது, அவர் வாழ்நாட்களில் பெற்ற முக்கியமான அனுபவங்களின் வழியாக, ஆபிரகாமின் விசுவாசம் வளர்ச்சியடைந்தது. இப்பொழுது, இந்த கடினமான சோதனையின் மத்தியில் அவருடைய விசுவாசம் உறுதியாக நிமிந்து நின்றது.

## மோரியா தேசம்

**ஆபிரகாம்** தன்னுடைய குமாரனைப் பலி செலுத்த வேண்டிய இடம் தேவனால் குறிக்கப்பட்டது - "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்." (ஆதியாகமம் 22:2) தேசத்தை மட்டுமல்ல அங்குள்ள மலையையும் குறிப்பிட்டார். கொஞ்ச காலத்திற்குப்பின் தேவனுடைய ஆலயம் கட்டப்படுவதற்கு அதே இடம் பயன்படுத்தப்பட்டது. (எருசலேம்) அதற்கு பின் அந்த இடத்தில் (எருசலேமில்) நம்முடைய ஆண்டவராம் இயேசு கொடுத்த ஈடுபலியை அடையாளப்படுத்தும்படி, நிழலான அநேக பலிகள் செலுத்தப்பட்டது.

கிட்டத்தட்ட எட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்- " பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான். " (11நாளாகமம் 3:1) அவ்விடத்தில் சாலோமோன் ஆலயம் கட்டினார். கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்களுக்குப் பின் சாலோமோன் கட்டின ஆலயத்தின் அதே அளவிலான உயரத்தில் கொல்கொதா மலையில் இயேசு நம்முடைய பாவத்திற்காக மரித்தார்.

"மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான்." (ஆதியாகமம் 22:4)" உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்." (யோவான் 8:56) என்று இயேசு ஆபிரகாமைக் குறித்துச் சொன்னார். ஆனால் "தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து தூரத்திலே" என்ற காரியம் ஆபிரகாம் விசுவாசத்தினால் கண்டார் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டின் சாட்சியின்படி, ஆபிரகாம் தன்னுடைய வாழ்க்கையில் இந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ள ஆதாமிலிருந்து 2000 வருடம் சென்றது. ஆதாமின் நாட்களிலிருந்து கிட்டதட்ட மூன்றாவது ஆயிரவருடத்தில் ஆபிரகாம் வாழ்ந்திருக்கவேண்டும் என்று பொருள்படுகிறது. அதாவது பலி செலுத்தக்கூடிய இடத்தைப் பார்ப்பதற்கு "மூன்றாம் நாளானது" என்ற அர்த்தத்தையும் நாம் எடுத்துகொள்ளலாம்.

"ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள்." (ஆதியாகமம் 22:6 ) ஈசாக்கு கட்டைகளைச் சுமந்ததுபோல, இயேசு தன்னுடைய சிலுவையைச் சுமந்து கொல்கொதா சென்றார். " அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள்." (யோவான் 19:17) ஆபிரகாம் தன் கையில் நெருப்பை வைத்திருந்ததுப்போல இயேசுவின் பலியுடன் கூடிய அவருடைய உபத்திரவங்களும், பாடுகளும், பரலோகப் பிதாவினுடைய கட்டுக்குள் அடங்கியிருந்தது. ஆபிரகாமின் கையிலிருந்த கத்தி தேவனுடைய வார்த்தைகளை அடையாளப்படுத்துகிறது. (எபிரெயர் 4:12) ஒருவேளை இயேசு சத்தியத்திற்கு ஏற்ற

சாட்சியை சுமந்ததினால் மரித்தார் என்பதை, அவருடைய கையிலிருந்த கத்தி அடையாளப்படுத்தக்கூடும். (யோவான் 17:17 , 18:37) "தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள்" (யோவான் 8:40)

"தகனப்பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே " ? என்று ஈசாக்கு ஆபிரகாமிடம் வினவினப்போது - "அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்." ( ஆதியாகமம் 22:8) என்று ஆபிரகாம் பதிலளித்தார். அதேபோல தேவன் நமக்கு இயேசுவைக் கொடுத்தார் -"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." (யோவான் 1:29) அந்த இடத்தை சென்றடைந்தப்போது தகன பலிக்காக நியமித்திருந்த பிரமாணத்தின்படி, ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அடுக்கப்பட்ட கட்டையின் மேல் ஈசாக்கைக் கிடத்தினார். (ஆதியாகமம் 22:9, லேவியராகமம் 1:6-8)

ஆபிரகாம் தன்னுடைய கத்தியை எடுத்தபோது, அந்த இக்கட்டான நேரத்தில் தேவ தூதர் ஒருவர் குறுக்கிட்டார். ஈசாக்கு விடுவிக்கப்பட்டார். ஆனால் ஆபிரகாம் மனப்பூர்வமாக தனக்குக் கொடுக்கப்பட்ட சோதனையில் ஜெயித்து, தன்னுடைய விசுவாசத்தை நிரூபிப்பார் என்று தேவன் அறிந்திருந்தார். இந்த சம்பவத்தில் ஈசாக்கு மரிக்கவேண்டிய அவசியமில்லாதிருந்தது. ஆனால் தேவனுடைய நீதியை நிறைவேற்ற கல்வாரியில் மரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இயேசு அந்த மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு எந்த வழியும் இல்லை." என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்த்தார்..."(எபிரெயர் 2:9) ஆயினும், மூன்றாம் நாளில் இயேசு மரணத்திலிருந்து வெற்றிகரமாக உயர்த்தெழுந்தார். ஆபிரகாம் தன்னுடைய மகனை பலிபீடத்தின்மேலிருந்து பெற்றுக்கொண்டதுபோல, நம்முடைய பரலோகத் தந்தையும் தம்மால் நேசிக்கப்பட்ட குமாரனை மரணத்திலிருந்து பெற்றுக்கொள்வார் என்பதை இந்த சம்பவம் சித்தரிக்கிறது. (எபிரெயர் 11:19)

## புதருக்குள் சிக்கிய ஆடு

ஆபிரகாமின் விசுவாசத்தின் உச்சக்கட்ட சோதனை முடிவடைந்தப்பின் அவர் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, புதருக்குள் ஒரு ஆட்டுக்கடா சிக்கியிருந்தது. தேவனுடைய கரம் தேவைக்கேற்றபடி உதவியதை ஆபிரகாம் உணர்ந்தார். அந்த ஆட்டுக்கடாவை தகனபலியாக தேவனுக்குச் செலுத்தினார். அதேபோல நம்முடைய பாவத்திற்கான ஏற்ற பலியை, பிதாவாகிய தேவன் மட்டுமே கொடுக்கமுடியும் .

நம்முடைய ஆதி பெற்றோரையும், அவர்களின் முழு சந்ததியையும் இறுதியில் நம்மையும் தெய்வீக நீதி, நியாயமாக தண்டித்தது. ஆனால் ஆதாம் ஏவாள் மற்றும் அவர்களின் சந்ததியை பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு தேவனுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. ஏனெனில், மனுக்குலத்தை மரணத்தீர்ப்பிலிருந்து மீட்க, சிருஷ்டிப்புக்கு முன்னதாகவே தெய்வீகத் திட்டம் ஒன்றை அவர் வடிவமைத்தார். இந்த மனுக்குலத்தை, பாவத்தின் அனுபவங்களைப் பெற அனுமதித்து மீண்டும் அந்த பாவத்திலிருந்து மீட்பதன் மூலம் அவர்கள் என்றும் மறவாத சிறந்த பாடத்தைக் கற்றுக்கொள்வார்கள் என்று தேவனுடைய தெய்வீக ஞானம் கண்டது. இப்படியாக நீதியின் விளைவுகளும், பாவத்தின் பின்விளைவுகளும் ஆழமாகக் கற்றுக்கொள்ளப்படும், இதுவே நாம் அனைவரும் பெறக்கூடிய உயர்ந்த நிலைக்கான தேவனுடைய சிறப்பான ஏற்பாடாகும்.

இந்த தெய்வீகத் திட்டம் வெற்றிகரமாக முடிவடைவதற்குப் போதுமான தெய்வீக வல்லமை செயல்படுகிறது. இப்படியாக யுகங்களைப் பற்றிய தேவனுடைய அற்புதமான திட்டத்தில் அவருடைய தெய்வீகமான நான்கு குணங்களும் மிக நேர்த்தியாக இணைந்து செயல்படுகிறது. பழிவாங்கும் குணத்திற்கு எதிராக செயல்படும், அன்பே இம்முழு திட்டத்திற்கும் அடிப்படையானக் காரணம்.

ஏற்ற நேரத்தில் கொடுக்கப்பட்ட பலிபொருளை எண்ணி ஆபரகாம் எவ்வளவு மகிழ்ந்திருப்பார் என்பதை ஆதியாகமம் 22:14ம் வசனத்தில் வாசிக்கலாம். "ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது."

## ஒரு தகன பலி

அந்த சூழ்நிலையில் ஆபிரகாம் ஒரு தகனபலியைச் செலுத்தியது ஆச்சரியமானக் காரியம் அல்ல. ஏனெனில், அக்காலத்தில் அது வழக்கமாகச் செலுத்தப்பட்டு வந்தது. ஆனால் இஸ்ரயேலில் நியாயபிரமாணத்தின் உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டப்போது, மற்ற பலிகளைப் பற்றிய விபரங்களும் கொடுக்கப்பட்டது. இவைகள் அனைத்தும் லேவியராகமம், ஒன்று முதல் ஏழு அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் அனுசரிக்கப்பட வேண்டிய விதங்களைக் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலாம் அதிகாரம் தகனபலிகளைப் பற்றியும் 2ம் அதிகாரம் போஜன பலிகளைப் பற்றியும், 3ம் அதிகாரம் சமாதான பலிகளைப் பற்றியும், நான்காம் அதிகாரம் பாவநிவாரணப் பலிகளைப் பற்றியும், ஐந்தாம் அதிகாரம் குற்ற நிவாரணப் பலிகளைப் பற்றியும் விவரிக்கிறது.

செலுத்தப்படும் பலிகளில் சூழ்நிலைக்குத்தக்கதாக ஆண் அல்லது பெண் மிருகங்கள் பலியிடப்பட்டது. ஆனால் தகனபலியைப் பொறுத்தவரையில் அந்த மிருகம் ஆணாக இருக்க வேண்டுமென்ற சட்டம் கொடுக்கப்பட்டது. மோரியா மலையில் ஆபிரகாம் செலுத்தின தகனபலி, ஆதாமுக்கும் நம் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் ஈடுபலியை

மிகத் தெளிவாக சித்தரிக்கிறது. மிருகங்கள் மதிப்பிடப்படுகையில் ஆண்கள் மிக உயர்ந்த நிலையைப் பெறுகிறார்கள். (லேவியராகமம் 4:22,23, 27,28) அதேபோல நம்முடைய இயேசுவின் ஈடுபலியும் கூட மிக விலையுயர்ந்த பலியாயிருந்தது. மேலும் "பழுதற்ற " நிலையில் உள்ள மிருகங்கள் மட்டுமே பலி செலுத்தப்படவேண்டும் என்பதும் இதே பொருளைத் தருகிறது. (லேவியராகமம் 1:3) அவரவர் திராணிக்கு தக்கதாக ஒரு காளையையோ அல்லது ஒரு ஆட்டுக்கடாவையோ கொண்டுவரலாம். ஆனால் அது ஆணும் பழுதற்றதுமாக இருக்கவேண்டும். (எளியோர் பறவைகளைக் கூட பலிசெலுத்துவதற்கு சட்டம் அனுமதித்தது) ஈடுபலியை அடையாளப்படுத்தும் பஸ்கா ஆட்டிற்கும் இதே சட்டதிட்டங்கள் கொடுக்கப்பட்டது. பஸ்கா ஆடு ஆணும் பழுதற்றதுமாய் இருக்கவேண்டும். (யாத்திராகமம் 12:5)

"அன்றாட பலி" செலுத்தப்படும் போது ஒவ்வொரு காலையிலும், மாலையிலும், ஆசிப்புக்கூடாரத்தில் தகனபலிகள் செலுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து ஆலயத்திலும் செலுத்தப்பட்டது. இவைகளும் இயேசுவின் ஈடுபலியை சித்தரிக்கிறது. அவர் காலையில் சிலுவையில் அறையப்பட்டு, மாலையில் மரித்தார். (எண்ணாகமம் 28 :3,4, மாற்கு 15:25, 34 -37) நித்தமும் செலுத்தப்பட்ட, "அன்றாட பலி" அந்த பலிபீடத்தின் அஸ்திபாரமாக இருக்கும் என்பதை பொருள்படுத்தியது. அதாவது இஸ்ரயேலர்கள் கொண்டு வரக்கூடிய பலி பொருட்கள் அதன் மேல் செலுத்தப்பட்டது. (இஸ்ரயேலர்கள் செலுத்தக்கூடிய சமாதான பலிகள்" அக்கினியின் மேல் அடுக்கப்பட்ட கட்டைகளின் மேல் எரிக்கப்பட வேண்டும்" என்று லேவியராகமம் 3:5ம் வசனம் குறிப்பிடுகிறது) நித்தியமான பயனளிக்கக்கூடிய நம்முடைய ஆண்டவரின் ஈடுபலி - தேவன் அங்கீகரிக்கக்கூடிய நம்முடைய பலிகளுக்கு அஸ்திபாரமாய் இருக்கிறது.

செலுத்தப்படும் தகனபலிகள் - "யேகோவா தேவனுக்கு சுகந்த வாசனையாக" விவரிக்கப்படுகிறது. (லேவியராகமம் 1:13) நம்முடைய இயேசுவின் பலிக்கும் இதே வார்த்தைகள் பொருத்தப்படுகிறது. "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5:2)

## தேவனிடமிருந்து ஒரு ஆணை

தேவன் கொடுத்த ஆட்டுக்கடாவை ஆபிரகாம் தகனபலி செலுத்தினார். தொடர்ந்து நடந்த சம்பவங்களை நிதானித்து, தேவன் மேல் கொண்டுள்ள விசுவாசத்தை முழுமையான கீழ்ப்படிதலோடு முற்றிலுமாக நிரூபித்த அந்த விசுவாசமுள்ள மனிதனைக் குறித்து ஒரு விசேஷித்த அறிவிப்பை ஒரு துதன் கொடுத்தார். "கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதியாகமம் 22:15-18)

இதை குறித்து, எபிரெயர் 6:17ம் வசனம் விளக்குகிறது. " தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளு கிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். " விதிவிலக்கான ஒரு சூழ்நிலையில், விதிவிலக்கான ஒரு காரியம் முன்னதாக வடிவமைக்கப்பட்டது. ஈசாக்கு அடுக்கப்பட்ட கட்டையின்மேல் பலிப் பொருளாகக் கிடத்தப்பட்டார். (அவருக்குப் பதிலாக ஆட்டுக்கடா தகனிக்கப்பட்டது) இந்த காரியம் இயேசு சிலுவையில் அறையப்படுவதை முன்னறிவிக்கிறது. "பூமியில் உள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய அற்புதமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, இந்த பலியை உறுதிபடுத்த வேண்டியதாயிருந்தது. யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டை நிறைவேற்றுவதற்காக, தேவன் இந்த ஆண் பலியைக் கொண்டு உறுதிபடுத்தினார்.

இந்த சூழ்நிலையில் ஆபிரகாமின் சந்ததி ஒரு மிகப் பெரிய அளவில் விவரிக்கப்படுகிறது. இதில் வானத்தின் நட்சத்திரங்களையோ (பரலோக ஆசீர்வாதம்), கடற்கரை மணலையோ (பூமிக்குரிய ஆசீர்வாதம்) தனிப்பட்ட முறையில் குறிப்பிடாமல் இருபகுதிகளையும் இணைத்து ஆபிரகாமின் சந்ததி என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஏனெனில், ஆபிரகாமின் வழியாய் வந்த யாவரும் கிறிஸ்துவின் ஒரே பலியினால் முதலில் மீட்கப்படுகிறார்கள்.

## பெயர்செபாவிற்கு திரும்புதல்

ஆபிரகாமும் அவரைச் சேர்ந்தவர்கள் பெயர்செபாவிற்கு திரும்பி வந்து குடியேறினார்கள் என்று ஆதியாகமம் 22:19 வசனம் கூறுகிறது. பெயர்செபா என்பதற்கு "சத்தியம் அல்லது ஆணையின் கிணறு" என்று பொருள் (ஆதியாகமம் 21:31) ஒரு வேளை வெளிப்படுத்தல் 22:1ம் வசனத்தில் விவரிக்கப்பட்டிருப்பதைப்போல தண்ணீர் சத்தியம் மற்றும் நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்தக்கூடும். இந்த ஆசீர்வாதங்கள், ஆபிரகாமிற்கு கொடுத்த உடன்படிக்கையின் பிரமாணத்தின் அடிப்படையில் உறுதிபடுத்தப்பட்டது.


உடன்படிக்கையின் இந்த பிரமாணம் கிறிஸ்துவின் பலியின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பலி ஈசாக்கின் பலியில் அடையாளப்படுத்தப்படுகிறது.

சில காலம் சென்றபின், ஆபிரகாம் விட்டுவந்த உறவினரைக் குறித்த ஒரு செய்தியைக் கேள்விப்பட்டார் அவர் தந்தை தேராகு மரித்தபின் அவருடைய சகோதரன் நாகோர், மெசபத்தோமியாவில் வாழ்ந்து வந்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு ஆபிரகாம் அழைப்பைப் பெற்றபோது, அவர் மெசபெத்தோமியாவை விட்டு தேவன் கொடுத்த புதிய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ள விசுவாசத்தோடு புறப்பட்டார், ஆனால் இஸ்ரயேலில் உள்ள அனைவரும் இப்படிப்பட்டவர்களாய் இருக்கவில்லை. நாகோர் மெசபத்தோமியாவில் தரித்திருந்ததுபோல அநேக இஸ்ரயேலர்கள் தங்களுடைய பழைய பாரம்பரிய நம்பிக்கைகளில் தரித்திருந்தார்கள். இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் இந்த இஸ்ரயேலருக்கேற்ற ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும். இந்நாளிலும் கூட இந்த மாம்சீக இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின் அவர்கள் சுதந்திர தேசமாய் செயல்படுகிறார்கள். மேலும், ஆயிரம் வருட அரசாட்சியின் போது, சகல ஜாதிகள் மத்தியில் கனத்துக்குரிய இடத்தை அவர்கள் பெறுவார்கள். (சகரியா 8:22)

அநேக வருடங்கள் ஆபிரகாம் தன்னுடைய இனத்தாரை விட்டுப்பிரிந்திருந்தார். ஆனால், நல்ல செய்திகளைக் கேள்விப்பட்டார். "இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: மில்க்காளும் உன் சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்;" (ஆதியாகமம் 22:20)

அதைத் தொடர்ந்து வரிசையாக பன்னிரெண்டு பிள்ளைகளைப் பெற்றதாக செய்தி வந்தது. நாகோரின் மனைவியாகிய மில்க்காளுக்கு எட்டு குமாரரும், மறுமனையாகிய ரேயுமாளுக்கு நாலு குமாரரும் பிறந்தார்கள். யாக்கோபு தன்னுடைய மனைவிகள் மற்றும் மறுமனையாட்டிகள் மூலம் பெற்ற பன்னிரெண்டு பிள்ளைகள் இஸ்ரயேல் ஜாதி உருவானதுப்போல, நாகோர் தன்னுடைய மனைவி மற்றும் மறுமனையாட்டியின் மூலம் பெற்ற பன்னிரெண்டு குமாரர்கள் காலபோக்கில் இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரத்தை அடையாளப்படுத்தியது. அதாவது யாக்கோபின் பன்னிரெண்டு பிள்ளைகள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் என்றும், நாகோரின் பன்னிரெண்டு பிள்ளைகள் மாம்சீக இஸ்ரயேலர்கள் என்றும் அடையாளமாய் காட்டுகிறது. (ஆகார் நியாப்பிரமாண உடன்படிக்கையையும், அவளது குமாரன் இஸ்மயேல் இஸ்ரயேலையும், இஸ்மயேலுக்குப் பிறந்த பன்னிரெண்டு குமாரர்கள், இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் அடையாளப்படுத்துவதாக கலாத்தியர் 4:22-25 வசனங்களில் பவுல் எடுத்துக்காட்டுகிறார். ஆதியாகமம் 25:12-16. இப்படியாக நாகோரின் பன்னிரெண்டு குமாரர்களை மாம்சீக இஸ்ரயேலரின் பன்னிரெண்டு கோத்திரங்களுக்கு நாம் ஒப்பிடலாம்.)

நாகோரிடமிருந்து இந்த செய்தி அநேக வருடங்களுக்குப்பின் வந்தது. ஆதியாகமம் 23ம் அதிகாரத்தின் துவக்கத்தில் சாராள் மரித்தப்பின் இந்த செய்தி அறிவிக்கப்பட்டது. அதேபோல் அநேக வருடங்களுக்குப்பின் சுவிசேஷ யுகத்தின் முடிவில் இஸ்ரயேலர்கள் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு மீண்டும் திரும்புவார்கள். இந்த சம்பவம் சாராள் மரித்தவுடன் நடைபெற்றதுபோல சாராளின் உடன்படிக்கைக்குரிய ஆசீர்வாதங்கள் நிறைவடைந்த பின் (சுயாதீனம் பெற்ற சபை நிறைவடைந்தபின் ) நாகோரின் பிள்ளைகளை அடையாளப் படுத்தும் இஸ்ரயேலர்கள் மீண்டும் முழுமையாகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.



# உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் ரக்கமுள்ளவர்களாயிருங்கள (லூக்கா 6:36)

இந்த கட்டுரையின் தலைப்பில், குறிப்பிட்டிருக்கும் வேதபகுதியை லூக்கா மட்டுமே பதிவு செய்திருக்கிறார். மத்தேயு மற்றும் மாற்கு, இருவருமே இராப்போஜனத்தின போது பரிமாறப்பட்ட பாத்திரத்தைக் குறிப்பிடுகிறார்கள். அதற்கு முன் கொடுத்த பாத்திரத்தைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. கடைசி இராப்போஜனத்தின்போது கொடுக்கப்பட்ட இரண்டு அடையாளங்களைப்பற்றி மட்டுமே யோவானும் குறிப்பிடுகிறார். ஆனால், இரண்டு பாத்திரங்கள் பரிமாறப்பட்டதை லூக்கா குறிப்பட்டு, அவைகளுக்குள் இருக்கும் வித்தியாசத்தைக் காட்டினார். ஆயினும், இந்த இரண்டு பாத்திரங்களில் இருந்த திராட்சரசமும் நம்முடைய ஜீவனுக்காக சிந்தப்பட்ட நம்முடைய ஆண்டவரின் இரத்தமாயிருக்கிறது. (ஜீவன்) (லூக்கா 22:20)

இந்த தொகுப்பை எழுதின லூக்கா, கடைசி இராப்போஜனத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே இந்த செய்தி மற்றவர்களிடமிருந்து கேட்டு அறிந்திருக்கவேண்டும். ஒருவேளை இராபோஜனத்தை அனுசரித்த ஒரு அப்போஸ்தலனிடமிருந்து அவர் கேட்டறிந்திருக்கலாம். அல்லது லூக்கா தன்னுடைய தனிப்பட்ட ஆராய்ச்சிக்காக இஸ்ரயேலுக்குச் சென்றபோது பவுலுடன் கூட இரண்டு வருஷம் சிறையில் இருந்தார். ஒருவேளை இந்த உண்மைகளை அவர் பவுலிடமிருந்து கேட்டறிந்திருக்கக்கூடும். (அப்போஸ்தலர் 24:27, லூக்கா 1:1-3) பவுல் லூக்காவுடன் சிறைச்சாலையில் சிறைப்படுவதற்குமுன் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிரூபத்தில் இந்த இரண்டு பாத்திரங்களைப்பற்றி குறிப்பிடுகிறார். ஆகவே, இந்த செய்திகளை லூக்கா பவுலிடமிருந்து அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், பவுல் அவருக்கு முன்னாக எருசலேமுக்குச் சென்றிருந்தார். (கலாத்தியர் 1:18, 2:1)

நம்முடைய ஆண்டவர் இந்த பாத்திரத்தைக் குறிப்பிடுகையில் அவருடைய வார்த்தைகளுக்குள் விசேஷித்த பொருள் இருந்தது. அந்த பாத்திரத்தில் **அவர்** பானம் பண்ணாமல். "உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். அதற்கு பின் "இது முதல் இந்த திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதை பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அதன் பொருளையும் விவரித்தார். அவருடைய வார்த்தைகள் உண்மையாக இருந்தபடியினால், அந்த மாலையில் மட்டும் அல்ல அதை தொடர்ந்துவந்த பகலிலும், அவர் சிலுவையில் அறையப்பட்டபோது - "கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்." (மத்தேயு 27 :34) அந்த காடி கசப்பாய் இருந்ததினால்."வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை" (மாற்கு 15:23)

ஒருவேளை திராட்சரசம் கலந்த அந்த காடியை அவர் குடித்திருந்தால், கடைசி இராபோஜனத்தின்போது அவர் சொன்ன வார்த்தைகள் மீறப்பட்டிருக்கும். நமக்காக சிந்தப்பட்ட நம்முடைய ஆண்டவரின் இரத்தம் திராட்சரசத்தை அடையாளப்படுத்தினால், அவர் அந்த பாத்திரத்தைப் பானம் பண்ணவேண்டிய அவசியம் இல்லை. (கிறிஸ்துவின் இரத்தம் பாவிகளுக்காக சிந்தப்பட்டது, பரிசுத்தராக இருந்த கிறிஸ்துவுக்கு அல்ல) இயேசு அந்த பாத்திரத்தில் பானம் பண்ணாதக் காரியம் எவ்வளவு ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே கிறிஸ்து அந்த பாத்திரத்தில் பானம் பண்ணவில்லை. ஆனால் "இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும்..." என்ற வசனத்திற்கு வேறு பொருள் இருக்கவேண்டும்.

இராப்போஜனத்தின்போது கொடுக்கப்பட்ட இரண்டாம் பாத்திரத்தைப் பற்றி இயேசு கூறுகையில் " இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." ( மத்தேயு 26:28) இயேசுவைப் பெறுத்த வரையில் அவர் பரிசுத்தவானாக இருந்ததினால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு அவசியமில்லாதிருந்தது. ஆகவே இயேசு அவர்களுக்கும், நமக்கும் மீட்பின் ஊற்றாய் இருப்பதினால், அந்த திராட்சரசத்தை மற்றவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தது நியாயமான காரியமாய் இருந்தது.

இயேசு சிலுவையில் அறையப்பட்டப்போது மதுரமான திராட்சரசத்தை அல்ல கசப்பான காடி கலந்த ரசத்தை ருசிப்பார்த்தார். இது மற்றவர்களுக்காக தன்னுடைய ஜீவனைக் கொடுப்பதினால் ஏற்பட்ட பாடுகளையும், உபத்திரவங்களையும் அடையாளப்படுத்துக் கூடும்.

## கொரிந்தியர்கள்

கடைசி இராப்போஜனத்தின், இரண்டு சந்தர்ப்பங்களில் பாத்திரத்தைக் குறித்த அடையாளத்தை அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதின முதலாம் நிரூபத்தில் இரண்டு முறை குறிப்பிடுகிறார். ஒன்றை 10ம் அதிகாரத்திலும், மற்றொன்றை 11ம் அதிகாரத்திலும் நாம்

வாசிக்கலாம். 10ம் அதிகாரத்தில் -"உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்." என்று சொல்லி சகோதரர்களை பரிசுத்தமாகும்படி எச்சரித்து மாம்ச இஸ்ரயேலர்களுக்கு நடந்ததை ஞாபகப்படுத்தினார். "அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்." (1கொரிந்தியர் 10:5)

"ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்." என்று 7ம் வசனத்தில் பவுல் எடுத்துரைத்து, குற்றம் செய்தவர்கள் பெற்ற தண்டனைகளை மாதிரியாக சகோதரர்களுக்கு மேற்கோள் காட்டினார். இதே போன்ற எச்சரிப்பை 14ம் வசனம் வரைக்கும் நாம் வாசித்தறியலாம்.

இப்படிப்பட்ட எச்சரிப்பைப் பெறுவதற்கு, கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்கள், எப்படிப்பட்ட விக்கரகாராதனை செய்யக்கூடும் ? 15ம் வசனத்திலிருந்த அந்த அதிகாரம் முழுவதிலும் இந்த கேள்விக்கான விளக்கத்தை பவுல் விவரிக்கிறார் - புறஜாதியாரின் பண்டிகைளில் இணைந்து செயல்படுவதை இங்கு குறிப்பிடுகிறது. அவர்களின் பண்டிககைளின் போது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை புசிப்பவர்கள், தேவனுடைய ஐக்கியத்தில் தொடர்ந்து செயல்பட முடியாது. இதுவே விக்கிரகாராதனையாகும். (இது நாம் புசிக்கும் உணவைப் பற்றி அல்ல, ஆனால் நாம் புசிக்கக்கூடிய புறஜாதியாரின் ஐக்கியத்தைப் பற்றி இங்கே சொல்லப்படுகிறது." அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது." 1கொரிந்தியர் 10:20-23)

நம்முடைய சார்பில், கிறிஸ்து செலுத்தின பலியில் நாம் கொண்டுள்ள ஐக்கியத்தைப் பற்றி நமக்கு நினைப்பூட்டி, இதன் பொருளை விலக்குகிறார். இப்படியாக, கடைசி இராப்போஜனத்தில் பயன்படுத்தப்பட்ட அடையாளங்களை 16ம் வசனத்தில் பவுல் அறிமுகப்படுத்துகிறார். "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா?" (1கொரிந்தியர் 10:17,18)

அடையாளங்களின் வரிசையில், முதலில் பாத்திரமும் அதற்குபின் அப்பமும் இடம் பெறுகிறது. இந்தக் குறிப்பு - லூக்கா எழுதின வசனத்திற்கு ஒத்துப்போகிறது. இதில் இயேசு முதலில் பாத்திரத்தை எடுத்து சீஷர்களுக்கு கொடுத்தார். அதற்குபின் போஜனத்தின்போது ஒருவேளை போஜனத்தின் முடிவில் அவருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தைக் கொடுத்திருக்கவேண்டும். இந்த பாத்திரத்தை "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்று பவுல் குறிப்பிடுகிறார். அதாவது அந்த பாத்திரத்திற்காக நன்றி செலுத்தினார்கள். இந்த விஷயத்தில் அந்த சாயங்கால போஜன வேளை துவக்கத்தில் ஒரு புத்துணர்ச்சிக்காக, இந்த ரசம் பரிமாறப்பட்டிருக்கவேண்டும். இந்த பாத்திரத்தைக் குறித்தே லூக்கா குறிப்பிட்டிருக்கிறார். இந்த பாத்திரம் "கிறிஸ்துவின் இரத்தத்தை" அடையாளப்படுத்தும் என்று பவுல் கூறுகிறார்.

11ம் அதிகாரத்தில் அடையாளங்களைக் குறித்து இரண்டாவது முறையாக பவுல் விளக்கம் அளிக்கிறார். இது சபைக்குள்ளிருக்கும் ஐக்கியத்தையும், அன்பையும், தொடர்பு கொண்டிருப்பதைக் காட்டுகிறார். இங்கு அவர் முதலில் அப்பத்தையும், அதற்குபின் பாத்திரத்தைப் பற்றி பேசுகிறார். இந்த இடத்தில் "போஜனம் பண்ணின பின்பு" (1கொரிந்தியர் 11:25) என்று அவர் குறிப்பிடுகிறார். அதாவது இயேசு போஜனம் பண்ணினபின்பு, கடைசி இராப்போஜனத்தை முடித்தபின்பு பாத்திரத்தை எடுத்தார் என்று குறிப்பிடப்படுகிறது. 10ம் அதிகாரத்தில் "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்றும் சொல்லப்பட்டபின் அப்பத்தைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், 11ம் அதிகாரத்தில் அப்பம் புசித்தப்பின் பாத்திரத்தைப் பற்றி சொல்லப்படுகிறது. ஆகவே, இங்கு இரண்டு பாத்திரங்கள் பரிமாறப்பட்டதை நாம் தெளிவாகக் காணலாம். ஆயினும், இரண்டு காரியங்களிலும் - முக்கியமான ஒரே அடையாளம் சித்தரிக்கப்படுகிறது. (திராட்சரசம் - கிறிஸ்துவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. ) -1கொரிந்தியர் 11:25

இந்த இரண்டு பாத்திரங்களுக்குள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் - இயேசுவின் பலியை நாம் துவக்கத்தில் புரிந்துகொண்டு, நம்முடைய நன்றிகளை ஏறெடுப்பதே முதல் பாத்திரமாக அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும், இயேசுவின் ஈடுபலியை ஆழமாக புரிந்துகொண்டு அதை நம்முடைய இருதயத்தில் உணர்ந்து கொள்வதை இரண்டாம் பாத்திரம் அடையாளப்படுத்தக்கூடும். இந்த ஒரு காரியத்தை, ஆசரிப்புக்கூடாரத்தின் ஏற்பாட்டிலிருக்கும் இரண்டு நிலைகள் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. தேவனை சந்திக்கப் போகும் ஒருவர் முதலில் வெண்பஞ்சு நூலால் செய்யப்பட்ட திரைக்குள் நுழைந்து,

பிரகாரத்தைச் சென்றடைகிறார். இப்படியாக, கிறிஸ்து நமக்காக செய்த காரியங்களை புரிந்துகொண்டு, தேவனிடத்தில் தொடர்ந்து செல்ல அவர் ஊக்குவிக்கப்படுகிறார். அதற்கு பின், பலிபீடத்தை சென்றடையும்போது. நமக்களிக்கப்பட்ட கிருபையான பரிசுகளுக்காக, கிறிஸ்து பட்ட பாடுகளை நாம் உணருகிறோம்.

## புசிப்பும் குடிப்பும்

இக்கால சுவிசேஷ யுகத்தில் நம்முடைய விசுவாசத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு, கிறிஸ்துவோடுகூட நாம் பலி செலுத்துவோமானால், பரலோக இராஜ்யத்தில் ஒரு மகிழ்ச்சிகரமான விழா கூடுதலில், அவரை சந்தித்து மகிழலாம். அப்பொழுது இயேசு " இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணுவென்.....என்பார்." ( மத்தேயு 26:29) "நவமானதாய்" என்ற வார்த்தை "கைநான்" என்ற கிரேக்க பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு புதிய காலத்தில் மகிழ்ச்சியான பாத்திரம், அப்பொழுது பரிமாறப்படும். இக்காலத்தில் உபத்திரவங்கள் நிறைந்த பாத்திரத்தைப்போல் அது இல்லை. ஒரு வகையில் இக்காலத்தில் தேவனுடைய ராஜ்யம் ,அதன் ஆசீர்வாதங்களோடு துவங்கியிருப்பதை எண்ணி மகிழ்ச்சியடையலாம். தேவன் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்." (கொலொசேயர் 1:13) இதன் அடிப்படையில், நாம் இக்காலத்து ஆசீர்வாதங்களில் ஆண்டவரோடு "புசித்து குடித்து" மகிழ்கிறோம். ஆகவே, நாம் அனைவரும் - "கிறிஸ்து இயேசுவுக்குள்....அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்." (எபேசியர் 2:6)

நம்முடைய ஆண்டவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் அப்போஸ்தலர்களிடம் பேசியபோது மேற்கூறிய காரியத்தைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவர் சிலுவையில் தாகத்தோடு தொங்கும்போது அந்த சகப்பான காடியை ருசிப்பார்க்கவில்லை. ஆனால் உயிர்த்தெழுந்தப்பின் சீஷர்களோடு அவர் - "... மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தார்...."( அப் 10:41) "தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்." (லூக்கா 14:15)

ஆவிக்குரிய பரிமாற்றத்தையும், ஐக்கியத்தையும் - "புசிப்பும் குடிப்பும்" என்ற அதே அடையாளங்கள் பழைய ஏற்பாட்டிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய தரிசனத்தைக் காணும்படி மோசே, சீனாய் மலைக்கு அழைக்கப்பட்டபோது, ஆரோன் மற்றும் அவருடைய இரண்டு மூத்த குமாரர்களாகிய நாதாப், அபியுவும் அவரோடு சென்றார்கள். முழு இஸ்ரயேல் தேசத்தையும் அடையாளப்படுத்தும் "எழுபது மூப்பர்களையும்" அவர்களோடு சென்றார்கள். இப்படியாக தேவன் இஸ்ரயலோடு இருந்தார் என்பதை இந்த காட்சி நிரூபிக்க பயன்படுத்தப்பட்டது. மேலும் இது உண்மை என்று அனைவரும் புரிந்துகொள்ளவும், மோசே குற்றம் சுமத்தப்படாதபடிக்கும் அவரோடு எழுபத்திமூன்று நபர்கள் சாட்சிக்காக வரவழைத்தார். ( இதற்கு முன் பத்து கற்பனைகளை அவர் முதன்முறை கொடுத்தப்போது, மோசே சொன்னதினால் மட்டுமல்ல, சீனாய் மலையின் அடிவாரத்தில் கூடியிருந்த இஸ்ரயேல் ஜனங்களின் காதுகள் கேட்க, அந்த கற்பனைகள் பரலோகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டது. (யாத்திராகமம் 19 :23-25, 20 :1-19, உபாகமம் 5:4, 22- 24) இப்படியாக, பாளையத்தில் உள்ள ஒவ்வொருவரும், இந்த பத்துக் கட்டளைகள் தேவனுடைய பிரமாணங்கள் என்று உறுதிப்படுத்திக் கொண்டார்கள். ) "இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள். " (யாத்திராகமம் 24:10,11) {யாத்திராகமம் 24:10ம் வசனத்தில் சொல்லப்பட்ட தேவனைப் பற்றிய விபரங்கள் ,எசேக்கியேல் 1:26ம் வசனத்தில் சொல்லப்பட்டவைக்கு ஒப்பாக இருக்கிறது. }"புசிப்பும் குடிப்பும்" தெய்வீகமான சந்தோஷத்திற்கும், மகிழ்ச்சியான ஐக்கியத்திற்கும் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது.

## பர்சிலாவிற்கு அளிக்கப்பட்ட விருந்து

இராஜாவாகிய தாவீதின் வயது முதிர்ந்த சிநேகிதனாகிய பர்சிலாவைக் குறித்து ஒரு அருமையான சரித்திர சருக்கத்தை IIசாமுயேல் 19ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். இந்த பர்சிலா தாவீதின் ஆட்களுக்கு தேவவைப்பட்ட நேரத்தில் அன்போடு ஆதரவளித்து பராமரித்தார். இதை அறிந்த தாவீது தன்னோடு விருந்துண்டு மகிழும்படி அவரை எருசலேமுக்கு அழைப்பித்தார். (IIசாமுயேல் 19:33)

பர்சிலா தன்னுடைய என்பது வயதைக் காரணம் காட்டியும், தான் வர இயலாததையும் மனத்தாழ்மையோடு கூறி, அந்த அழைப்பை ஏற்க மறுத்தார். "புசிக்கிறதும் குடிக்கிறதும் உமது அடியானுக்கு ருசிகரமாயிருக்குமோ? " (வசனம் 35) என்று சொல்லி, நீண்ட காலமாய் வாழ்ந்த யோர்தானின் கிழக்கு பக்கத்தில் மீதியிருக்கும் நாட்களைக் கழிப்பதாகக் கூறினார். ஆனால் கிம்காமிற்காக அவர் தாவீது இராஜாவினிடத்தில் சில சலுகைகளைக் கேட்டுக் கொண்டார். ஒரு வேளை இந்த கிம்காம் பர்சிலாவின் குமாரனாய் இருந்திருக்கக்கூடும்.

இயேசு தன்னுடைய இராஜ்யத்தில் வந்து "சர்வ வல்லவரின்" வலது பாரிசத்தில் அமர்ந்தபோது (எபிரெயர் 1:3) பரம அழைப்பிற்கான வாய்ப்பு திறக்கப்பட்டது. நீதியுள்ள சிலர் புதிய ராஜாவின் அழைப்பை அன்போடு

மறுத்துவிடுகிறார்கள். அவர்களின் பாரம்பரிய பூமிக்குரிய எதிர் நோக்குகளின் காரணமாக, அந்த புதிய இராஜாவோடு, அவருடைய மேஜையில் புசிப்பதற்கும் குடிப்பதற்குமான ஒரு சிலாக்கியத்தை தாங்களே மறுத்து விடுகிறார்கள். இவர்கள் யோர்தானுக்கு மறுபக்கமான உலக நன்மைகளை பெறுவதற்கு, மனப்பூர்வமாய் சம்மதிக்கிறார்கள். ஆனால் பர்சிலாவின் அடுத்த சந்ததியான இளவயது கிம்காம், புதிய இராஜாவோடு எருசலேமின் இராஜரீகமான மேஜையில் அமர்ந்து அவரோடுகூட **புசிப்பதற்கும் குடிப்பதற்கும்** சலுகையைப் பெற்றார்.

## கல்யாண விருந்தை குறித்த உவமை

பரலோக அழைப்பை அடையாளப்படுத்தும் திருமண, இராவிருந்தைப் பற்றி இயேசு சொன்ன உவமையிலும், புசிப்பும் குடிப்புமான அடையாளங்கள் காணப்படுகிறது. "ஒரு மனுஷன் பெரியவிருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்தான்….. தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா;" (லூக்கா 14:16-23) "அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்." (மத்தேயு 22:4) என்று மத்தேயு மேலும் நமக்கு விபரம் அளிக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் - நீதிமொழிகள் 9:1,2 வசனங்கள் மேற்கூறப்பட்ட உவமைக்கு ஆதாரமாக இருக்கவேண்டும். விருந்திற்காக ஆயத்தப்படுத்தப்படும் உணவுகளையும் திராட்சரசத்தையும் பற்றி இது குறிப்பிடுகிறது - "ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து, தன் கொழுத்த ஜந்துக்களை அடித்து, திராட்சரசத்தை வார்த்துவைத்து, தன் போஜனபந்தியை ஆயத்தப்படுத்தி."

நம்முடைய பரலோகத் தந்தை தம்முடைய ஒரே பேரான குமாரனின் ஈடுபலியின் மூலமாக, நமக்கு இவ்வளவு விலையேறப் பெற்ற ஆயத்தத்தை ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை நாம் ஆழமாகப் புரிந்துகொண்டால் - நிச்சயமாக, ஆவிக்குரிய ஐசுவரியங்கள் நிறைந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும், அந்த மேன்மையான உன்னத அழைப்பையும் நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுவோம்.

## தீர்க்கதரிசனத்தில் இன்று . . .

# டக்சன்னில் துப்பாக்கிச் சூடுதல்

புத்தியில்லாத மனுஷன் காட்டுக்கழுதைக்குட்டிக்கு ஒப்பாகப் பிறந்திருந்தாலும், பெருநெஞ்சுள்ளவனாயிருக்கிறான். -யோபு 11:12

அரிசோனை சேர்ந்தவரும், பிரதிநிதியான, முதல் யூத கான்கிரஸ் பெண்ணான காபிரில்லி கிப்போர்டுஸையும் மற்ற பத்தொன்பது பேர்களையும் கடந்த ஜனவரி 8ம் தேதி அன்று, குற்றம் சாட்டப்பட்ட ஜாரெடு லீ லாயுனர் சுட்டுக்கொன்றான். இவன் அமெரிக்க அரசாங்கத்தின்மேல் நீண்ட காலம் விரக்தி கொண்டவனாகத் தோன்றுகிறது. இந்த கொலைகளுக்கு எந்தவிதமான பின்னணியும் இல்லை என்றும், தன்னுடைய சொந்த வெறுப்பினால் இவைகளை செய்தான் என்றும் அரசாங்க விசாரனைக்குழு யூகித்தது. இந்த கொலைகளைச் செய்த காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு விசாரனை கமிஷன் மிகவும் திணறினார்கள். அமைதியாகக் காணப்பட்ட இந்த இளைஞன், எந்த விதமான குழப்பமும் இன்றி இத்தனை கொலைகளைச் செய்தான் என்பதை விசாரனையில் தெரியவந்தது.

2009ம் வருடம், ஸ்க்கிரிப்ஸ் கல்லூரியில், கிப்போர்டுஸ் ஒரு செய்தி கொடுப்பதற்குமுன், "மனித தன்மையற்ற கொலைகளை அல்லது மனிதனுக்கு தீங்கு செய்யக்கூடாது என்ற அடிப்படையில் மட்டுமே இந்த உலகத்தின் பாதுகாப்பு அடங்கியுள்ளது. ஒருவர் தன்னுடைய நேர்மைக்காக தனித்து நிற்கும்போது, நம்மோடு ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஆகவே இப்படியிருப்பது மிகக் கடினமான ஒரு காரியம். ஆயினும், ஒருவருக்கு சரி என்று தோன்றக்கூடிய விஷயத்தில், அந்த நபர் கூட்டத்தோடு ஒத்துப்போகவில்லை என்றால், இதுவே தைரியத்தின் உயர்வான வெளிப்பாடாகும்." என்று துவங்கினார்.

### இதற்கு காரணமாக இருப்பவர் யார்?

ரைட்டு விங்கு ரேடியோ ஒலிபரப்பின (right-wing radio) சில மேதைகளின் நிகழ்ச்சியே இந்த பகையான சூழ்நிலையை உருவாகினதன் விளைவாக இந்த கொலைகள் நடத்தப்பட்டது என்று சிலர் கதறுகிறார்கள். "அவனுடைய கருத்துக்கள் இந்த உலகத்தில் எந்த ஒரு காரியத்திற்கும் தொடர்புடையதாக இல்லை" என்று அந்த குற்றவாளியின் முன்னாள் ஆசிரியர் ஒருவர் குற்றவாளியைப் பற்றி கூறினார்.

அரிசோனாவின் துப்பாக்கி பயன்படுத்துவதற்கு அதிகபட்சமாக உரிமை கொடுக்கப்பட்டதினால், இது சம்பவித்தது என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். "அதற்காக பாதையில் ஒருவரை ஒருவர் சுட்டுகொன்றுக் கொண்டிருக்கிறார்களா ? " என்று சட்டத்தை பாதுகாக்கக்கூடிய ஒரு மேல் அதிகாரி பதில் அளித்தார்.

Mein Kampf மற்றும் Communist Manifesto என்ற இரண்டு புத்தகங்களை அவன் விரும்பிப் படித்ததாக FBI விசாரனை கண்டுபிடித்தது. மேலும், இந்த துப்பாக்கிச் சூடுதலுக்குமுன் -"என்னை பயித்தியக்காரன் என்று எண்ணாதேயுங்கள்" என்று அவனுடைய நண்பர்களுக்கு இறுதியான ஒரு வாழ்த்துதலை சொல்லியிருந்தான்.

வரலாற்றில் பிரபலமான யூத மதத் தலைவரான மாய்மோநைட்ஸ் - "தேவன் மனிதனுக்கு சுயாதீனம் கொடுத்தார்.... ஒருவர் நன்மையான வழிக்குத் திரும்பி, நீதியைச் செய்யவேண்டும் என்று விரும்பினால், அதை நிறைவேற்ற அவனுக்கு வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஒருவர் தீமை செய்து, துன்மார்க்கமாக இருப்பதற்கும் சுயாதீனம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று Laws of repentance என்ற தன்னுடைய புத்தகத்தில் எழுதினார்.

சாத்தான் ஏவாளை வஞ்சித்ததைத் தொடர்ந்து, (1தீமோத்தேயு 2:14), தன்னுடைய மாம்சத்தின் விருப்பத்திற்கு இடம் கொடுத்தபடியால், (1யோவான் 2:16) புசிக்கவேண்டாம் என்று விலக்கின நன்மை தீமை அறியத்தக்கவிருட்சத்தின் கனியை (ஆதியாகமம் 2:16,17) ஆதாம் புசித்து தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழப்படியாமல் போனான். ஆகவே அனைவருக்கும் பாவம் செய்யக்கூடிய இந்த மனப்பாங்கு இருப்பதினால், ஒருவரையும் குற்றசாட்ட முடியாது என்று பவுல் கூறுகிறார். (ரோமர் 3:10) சீஷர்களாக இருப்பதற்கான சட்டங்களுக்கு, தங்களை மனப்பூர்வமாக கீழ்ப்படுத்த விரும்பக் கூடியவர்கள் மட்டுமே இந்த குற்றங்களிலிருந்து இயேசுவின் கிருபையினால் இன்று தப்பித்துக் கொள்கிறார்கள்.

பேராபத்துகள் நேரிடும்போது, ஜனங்கள் அதற்கான பதிலை தேடுவார்கள். ஆனால், தனிப்பட்ட நபரின் பொறுப்புகள் ========படுமோசமான மனநிலையை அடைந்திருக்கிறார்கள் என்ற பதிலை கேட்க அநேகர் ஆயத்தமாக இல்லை. ஒருவரின் செயலால், பல குடும்பங்கள் மரித்தும், காயப்பட்டும் இருப்பதினால், யாரையாவது அல்லது எதையாவது குற்றம் சாட்டவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

## கணக்கு கொடுக்கவேண்டிய நாள்

மனுஷன் தன்னுடைய சாயலில் இருப்பதற்காக அவனை சுயாதீனத்தோடு சிருஷ்டித்தார். அவனை ஒரு மிருகத்தைப்போலவும், ஒரு இயந்திரத்தைப்போலவும் படைக்கவில்லை. (ஆதியாகமம் 1:27) ஆதாம் தன்னை சிருஷ்டித்தவருக்கு எதிராக கலகம் பண்ணத்துவங்கினான். அதேபோல ஒவ்வொரு மனுஷரும் தங்களுக்கென்று ஒரு வழியை தெரிந்துகொண்டு கலகம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

கீழ்ப்படியாமையினாலும், பாவத்தினாலும் ஏற்படும் விளைவுகளை முழுமையாக ஆதாம் புரிந்துகொள்ள முடியாது என்பதை தேவன் அறிந்ததினால், மனுஷன் தான் விரும்பியபடி முதலில் இந்த தீமையின் அனுபவத்தையும், அதற்குபின் நன்மையின் அனுபவத்தையும் பெறுவதற்கு மிக அழகான ஒரு திட்டத்தை வடிவமைத்தார். அப்போது, தேவனுடைய நீதியான சட்டத்தை எதிர்த்த மனுஷனுடைய சட்டம் ஒன்றுக்கும் உதவாது என்று, இந்த வித்தியாசமான அனுபவங்கள் செயல் பூர்வமாக நிரூபிக்கப்படும்.

ஈடுபலியின் மூலமாக தேவன் மனுஷனை பாவத்திலிருந்தும், கீழ்ப்படியாமையிலிருந்தும் இரட்சிக்கிறார். பாவத்திலும், மரணத்திலும் விலைக்கிரயம் கொடுத்து மீட்பதே ஈடுபலியாகும். இப்படியாக, இயேசுவின் மரணத்தின் மூலம் ஏதோ ஒருசிலரை மட்டும் அல்ல, அனைவரும், தீமையின் அனுபவத்தோடு, முழு சுயாதீனத்தைப் பெற்றபின், கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு இறுதியில், நித்தியமான மகிழ்ச்சியைப் பெறுவதே தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. தேவனுடைய துணையின்றி தன்னால் எந்த பிரச்சனைகளையும் தீர்க்கமுடியாதபடிக்கு பேராபத்துக்களைச் சந்திக்கவேண்டும் என்ற உணர்வுகளை நிரூபிப்பதற்காக தேவன் தீமையை அனுமதித்தார்.

தானியேல் 12:1 மற்றும் மத்தேயு 24:21 ம் வசனங்கள் மகா உபத்திரவக் காலத்தைக் குறித்து முன்னறிவிக்கிறது. ஆகாய் தீர்க்கதரிசியும் இந்த காலத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார் - "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2:7) இன்று யுத்தங்கள், அரசியல், பொருளாதாரம் மற்றும் பல வழிகளில், தேசங்களுக்கு இருக்கும் விருப்பங்களை மற்ற தேசங்களின்மேல் திணிக்கிறார்கள். வன்முறையினாலும், சமயத்தில் கொலையினால், தங்களுடைய சித்தத்தை மற்றவர்கள் மேல் வலுக்கட்டாயமாக செலுத்துகிறார்கள். தீமையான இந்த உலகத்தில் இதன் விளைவுகளினால் மிக மோசமான பிரிவுகள் காணப்படுகிறது.

ஜனங்களின் முறையான விருப்பங்களையும் தேவன் மட்டுமே நிறைவேற்றமுடியும். ஏனெனில், எந்தவிதமான அரசாங்கத்தினாலும், மரணத்தை நீக்க முடியாது. தாங்கள் மிகவும் நேசித்தவர்களைத் திரும்பப் பெறுவதே ஒருவரின் மிகச்சிறந்த விருப்பமாகும். தேவனுடைய இராஜ்யத்தில் இவர்களின் விருப்பங்கள் பூர்த்திச் செய்யப்படும். தேவன் ஓசியாவின் மூலம் சொன்னதுபோல - "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14) "உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10) என்று இயேசு கற்பித்த ஜெபத்தில் சொல்லப்பட்ட காலமாக இருக்கும்.

அவருடைய இராஜ்யத்தில் ஒருவரும் காயப்படுவதற்கோ, அழிவதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை. (ஏசாயா 11:9, ரோமர் 8:21) இன்றைய வாழ்க்கையில் உள்ள காரியங்கள், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் நீதியையும், சமநிலையையும், நியாயத்தையும் வலுக்கட்டாயமாக கற்றுக்கொள்ள வழிவகுக்கும். (ஏசாயா 11:9) அப்பொழுது பூமியின் குடிகள் "இகழ்வோரை அவர் இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்." (நீதிமொழிகள் 14:34) அப்பொழுது அவர்கள் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுப்பார்கள். (எபிரெயர் 1:9) அந்த ஆட்சியின் கீழ் நீதியைக் கற்றுக்கொள்ளாதவர்கள், நித்தியமாக வாழ்வதற்கான உரிமையை இழந்துவிடுவார்கள். (அப்போஸ்தலர் :23, சங்கீதம் 37:9)

வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆசிரியர், இராஜ்யத்தின் வேலைகளைக் குறித்த ஒரு அருமையான சுருக்கத்தைக் கொடுத்திருக்கிறார். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. " (வெளிப்படுத்தல் 21:4) எவ்வளவு மகிமையான நாளாக அது விளங்கும் !